மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 8 • இதழ் 8 • பிப்ரவரி 2024 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்




RAMRAJ ©
COTTON
WHITE SHIRTS
WHERE
PERFECTION
MEETS
DIGNITY
SCAN QR CODE FOR
STORE LOCATION


மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்
நன்னெறிப் பாதை எதுவென்று நமக்குக் காட்டி
அதில் பயணிக்க வேண்டிய அவசியம் உணர்த்தி
வாழ்வை நெறியோடு நடத்தும் வழிகள் சொல்லும்
நன்னெறி
சிறப்பிதழ்
என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

நல்ல கதைகள் ஒவ்வொன்றும் வீரியம் மிக்க விதைகள். வழிதெரியாமல் தடுமாறிக் கொண்டிருப்பவர்களுக்கும் திசைகாட்டும் பணியைக் கதைகள் வழியாக நம் முன்னோர்கள் தொடர்ந்து செய்துகொண்டிருந்தனர். கதைகளின் வழியேதான் குழந்தைகளின் உலகம் விரிவடைகிறது. வரலாற்று நாயகர்கள்கூட இலக்கியம், இதிகாசம் எனக் கதைகளின் மூலமே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நம் குடும்பங்களில் தாத்தா பாட்டிகளின் பிரதான பணியே பேரக்குழந்தைகளுக்குக் கதை சொல்வதுதான். அதுவும் நன்னெறிக் கதைகள். செய்யக்கூடியவற்றையும், செய்யக்கூடாதவற்றையும் உணவில் மருந்து கலப்பது போல, கதைகளில் கலந்து ஊட்டினர். கதைகளைக் கேட்டு வளர்ந்த குழந்தைகள், தங்களுக்குள் ஒரு கதை உலகத்தை உருவாக்குகின்றனர். அதன்பிறகு அந்தக் கதைகளே குழந்தைகளை உருவாக்குகின்றன.

இன்றும் கிராமங்களில் இரவில் நடைபெறும் தெருக்கூத்து நிகழ்வுகளில் அரிச்சந்திர புராணம் பிரசித்தி பெற்றது. அரிச்சந்திரன் என்பவர் பொய்களை மறுத்துச் சத்தியத்தை ஏந்திய வாழ்வை அந்தப் புராணக் கதைதான் நம் அனைவரின் மனதிலும் கல்வெட்டாகப் பதியச் செய்திருக்கிறது.

முனிவர்களுக்கெல்லாம் முனிவரான வசிஷ்டர், “என் சீடன் மன்னன் அரிச்சந்திரன் வாழ்வில் ஒரு பொய்கூடச் சொல்லாதவன். உண்மையை மட்டுமே பேசுகிறவன்” என்று பெருமையுடன் ஒரு சபையில் கூறினார். வசிஷ்டரின் பெருமிதத்தை உடைக்க விரும்பினார் மற்றொரு மகாமுனி விசுவாமித்திரர். “மனிதன் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொள்கிறவன். அதனால் உங்கள் சீடன் அரிச்சந்திரன் கடுமையான சூழல் வரும்போது இயல்பாகப் பொய் பேசுவான். நான் நிரூபித்துக் காட்டுகிறேன்” என அதே சபையில் வசிஷ்டரிடம் சபதம் செய்தார் விசுவாமித்திரர். இருவருக்கும் எப்போதும் படாத ஒரு பகையுணர்வு இருந்துகொண்டே இருந்தது.

அரக்கன் ஒருவனைத் தன் தவ வலிமையால் மூர்க்கமான காட்டுப்பன்றியாக மாற்றினார் விசுவாமித்திரர். அரிச்சந்திரன் பராமரித்து வரும் மலர்கள் பூத்துக் குலுங்கும் பூந்தோட்டத்தை நாசம் செய்துவிட்டு வரும்படி கூறினார். பன்றியும் முனிவர் இட்ட கட்டளையை ஏற்று, அரிச்சந்திரனின் நந்தவனத்தைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டது. அங்கு பணிபுரிந்தவர்களால் அந்தப் பன்றியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அரிச்சந்திரனிடம் பன்றியின் அட்டகாசத்தைப் பற்றித் தெரிவித்தனர். பன்றியைக் கொல்வதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலை உருவானது.

வில்வித்தையில் சிறந்து விளங்கும் அரிச்சந்திரன் குதிரையில் புறப்பட்டுச் சென்று காட்டுப்பன்றியை வேட்டையாட முடிவு செய்தான். பன்றி வடிவத்தில் இருக்கும் அரக்கன், போக்குக் காட்டியபடி தப்பித்து ஓடிக்கொண்டே இருந்தான். அரிச்சந்திரனும் அதைத் துரத்தியபடி வெகு தூரம் வந்து விட்டான். எங்கு தேடியும் பன்றி கண்ணில் படவில்லை.

மிகவும் களைப்பாக இருந்தவன், அருகில் இருக்கும் ஓடையில் நீர் பருகி, நிழலில் அமர்ந்தான். அப்போது அங்கு வந்த ஒரு முதியவர், அரிச்சந்திரனிடம் தர்ம சாஸ்திரங்கள் பற்றி விவரிக்கத் தொடங்கினார். சீடனைத் தேடிவந்த குரு போல, தான் கற்ற அனைத்தையும் அரிச்சந்திரனுக்குப் போதித்தார்.

ஆள் நடமாட்டம் இல்லாத அந்தக் காட்டில் அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என அரிச்சந்திரன் விசாரித்தான். “என் மகளுக்குத் திருமணம் செய்துவைத்த பிறகு நான் மிகவும் ஏழையாகிவிட்டேன். இருக்க இடமில்லாமல் சுற்றித் திரிகிறேன்” என வருந்தினார் முதியவர். அவர் மீது இரக்கமுற்ற அரிச்சந்திரன், “இந்த வயோகத்தில் நீங்கள் கஷ்டப்பட வேண்டாம். என்னை அரசவையில் வந்து பாருங்கள். உங்களுக்கு வேண்டிய செல்வத்தை நான் அளிக்கிறேன்” என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு விடைபெற்றான் அரிச்சந்திரன்.


அடுத்த நாள் அந்த முதியவர் அரசவைக்குப் போய், “அரசே, எனக்கு வேண்டிய செல்வத்தைக் கொடுப்பதாக வாக்களித்தாய். எனக்கு உன் நாடு, உன் அரண்மனை எல்லாம் வேண்டும்” என்றார். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் போனால், பொய் சொன்னதாகிவிடும் என்பதால் அரிச்சந்திரனும் தயங்காமல் தன்னிடம் இருந்த அனைத்தையும் கொடுத்துவிட்டான்.

‘‘எல்லாம் சரி. காட்டில் நான் உனக்குப் போதனைகள் செய்தேன். நீ அறிந்துகொண்டாய். அதற்கான குருதட்சணை எங்கே?’’ என்று முதியவர் கேட்டார். தன்னிடம் தருவதற்கு எதுவுமில்லாத சூழலில், அரிச்சந்திரன் பரிதவித்துப் போனான். ‘முதியவர் கேட்ட அனைத்தையும் தருவேன்’ எனச் சொன்ன வாக்கு பொய்த்துவிடக்கூடாது என்பதால், அவரிடம் கால அவகாசம் கேட்டான். தன் மனைவி, குழந்தையுடன் காசிக்குச் சென்று வேலை செய்தான்.

அரசனாக இருந்தவன், மயானத்தில் பிணங்களை எரிக்கிற வேலைக்குப் போனான். மனைவியும் குழந்தையும் ஒரு செல்வந்தரின் வீட்டில் வேலை செய்தனர். அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு இது மிகவும் துன்பமாக இருந்தது. தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருக்கும்போது அரிச்சந்திரனின் மகன் பாம்பு கடித்து இறந்துவிடுவான். அவனை மயானத்தில் அடக்கம் செய்யப் பணம் கொடுக்க இயலாத நிலையில் இருந்தான் அரிச்சந்திரன். மகன் இறந்த பிறகு அடக்கம் செய்யக்கூட முடியாத நிலையை எண்ணி அரிச்சந்திரனும் மனைவியும் துயரத்தில் உழன்றனர்.

அப்போது அரிச்சந்திரனைப் பார்த்த முதியவர், ‘‘ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறாய்? ‘என்னால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை’ என்று சொல்லிவிடலாம் அல்லவா?’’ என்று கேட்டார். அதற்கு அரிச்சந்திரன், ‘‘அப்படிச் சொன்னால் நான் சொன்ன சொல் தவறியவன் என்பதாகிவிடும். அரிச்சந்திரனாகிய நான் ஒருபோதும் பொய் வாக்குறுதி அளிக்கமாட்டேன். எப்பாடு பட்டாவது உங்களுக்கு அளித்த வாக்கை மெய்ப்பித்துக் காட்டுவேன்’’ என்றான். சொன்னபடியேதன்னையேஒருவருக்கு அடிமையாக விற்று, அந்தப் பணத்தைக் குருதட்சணையாகக் கொடுத்து அரிச்சந்திரன் உண்மையை மட்டுமே பேசுவான் என்பதை மெய்ப்பித்துக் காட்டினான்.

அந்த முதியவர் உருவில் வந்தவர் விஸ்வாமித்திரர்தான். ‘‘எத்தகைய துன்பம் வந்தபோதும் பொய் பேசுவதில்லை என்ற உன் கொள்கையை உறுதியுடன் பின்பற்றினாய். உன் வாழ்வில் மிகுந்த சோதனைகளைச் சந்தித்தபோதும் அதனை நீ கைவிடவில்லை. உன் புகழ் இவ்வுலகில் என்றென்றும் ஓங்கி நிற்கும்’’ என்று அரிச்சந்திரனை அவர் மனதார வாழ்த்தினார். தானமாகப் பெற்ற நாட்டை அரிச்சந்திரனிடமே ஒப்படைத்தார். அவன் மகனையும் உயிர்ப்பித்துத் தந்தார்.



சிறுவயதில் கேட்ட அரிச்சந்திரன் கதையே, ‘வாழ்வில் பொய்யே சொல்லக்கூடாது’ என்ற மன உறுதியை மகாத்மா காந்திக்கு அளித்தது. தன் வாழ்நாள் முழுக்க அதை உறுதியாகக் கடைப்பிடித்தார். சத்தியம் என்கிற வெளிச்சத்தை ஏந்தி நம் தேசத்தையே வழிநடத்தினார். ஒரு சாதாரணக் குழந்தையை மகாத்மா காந்தியாக உருவாக்கியதில் அரிச்சந்திரன் கதைக்குப் பெரும்பங்கு உண்டு.

நன்னெறிக் கதைகள் வீரியமிக்க விதைகள் என்பதற்கு காந்தியடிகளின் வாழ்வே நற்சாட்சி. கருத்தாழம் மிக்க வாழ்விற்கு வழிகாட்டும் நல்ல கதைகளை நம் அடுத்த தலைமுறைக்கு அறிமுகம் செய்வது அவசியம். குழந்தைகளுக்கு மட்டுமின்றிப் பெரியவர்களுக்குமே சோர்ந்து போகும்போது தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் வழங்கும் வல்லமை கொண்டவை நன்னெறிகள். இம்மாத ‘வெண்மை’ இதழ் நன்னெறிகளின் அவசியத்தையும், சரியான அறிமுகத்தையும் வழங்குகிறது.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**

# நன்னெறியை உணவு போல ஊட்டுங்கள்!

ஓட்டப்பந்தயம் ஒன்றில் முயலைத் தோற்கடித்த ஆமை கதையைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. குழந்தைகளுக்குச் சொல்லப்படும் நன்னெறிக் கதைகளில் முக்கியமானது அது. ஓட்டப்பந்தயத்தை வேகமாக ஆரம்பித்த முயல், 'இந்த ஆமை எங்கே சீக்கிரம் வரப் போகிறது' என நினைத்துப் பாதிவழியில் தூங்கிவிட்டது. ஆமை நிதானமாக முன்னேறி ஜெயித்தது. சோம்பலும் அலட்சியமும் காட்டுகிறவர் தோற்பார் என்பதற்கு முயல் உதாரணம். நிதானமாகச் செயல்பட்டாலும், முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து செயல்படுகிறவர் ஜெயிப்பார் என்பதற்கு ஆமை உதாரணம்.



இந்தக் கதை இப்போது பல்வேறு வடிவங்களை எடுத்துவிட்டது. அப்படி ஒரு வடிவம் சுவாரசியமானது. குழந்தைகளுக்கும் பிடிப்பது. 'வேகமாக ஓடிவந்த முயல், ஏன் பாதி தூரத்தில் தூங்க வேண்டும்? இன்னும் சில நிமிடங்கள் ஓடியிருந்தால் இறுதிக்கோட்டைத் தொட்டு ஜெயித்துவிட்டே தூங்கியிருக்கலாமே' என்று கேள்வி எழும். அந்தக் கேள்வியிலிருந்து பிறந்ததுதான் இந்த வடிவம்.

இந்தக் கதையின்படி, உண்மையில் முயல் தூங்கவில்லை. வேகமாக ஓடிவந்த அது, ஆமையைக் கண்ணிலேயே காணவில்லையே என்று தயங்கியது. அது நெருங்கி வந்த பிறகு மீதி தூரத்தை ஓடலாம் என ஒரு ஆலமரத்தடியில் நின்றது. அப்போது தூரத்தில் தண்ணீர் சலசலக்கும் சத்தம் கேட்டது. நெருங்கிப் போய்ப் பார்த்தால் அது ஓர் அருவி. அந்த அருவியில் தண்ணீர் குடித்துவிட்டுக் கொஞ்ச நேரம் நீந்தலாம் என்று போனது.

அருவிக்கரையில் ஒரு துறவி அமர்ந்திருப்பதைப் பார்த்ததும், நெருங்கிச் சென்று வணங்கியது. "என்ன செய்கிறாய் முயலே?" என்று அவர் கேட்டார்.

"நான் ஒரு ஓட்டப்பந்தயத்தில் போட்டியிடுகிறேன்" என்றது முயல். உரையாடல் தொடர்ந்தது.

"எதற்காகப் பந்தயத்தில் ஓடுகிறாய்?"



“காட்டில் இருக்கும் எல்லா விலங்குகளுக்கும் என் வேகத்தை நிரூபிக்க வேண்டாமா?”

“சரி, அப்படி பந்தயத்தில் ஓடி நிரூபிக்க வேண்டிய அவசியம் என்ன?”

“எனக்குப் பதக்கம் கிடைக்கும், பரிசு கிடைக்கும், பணம் கிடைக்கும். அதை வைத்து எனக்குத் தேவையான உணவுகளை வாங்கலாம்.”

“இங்குதான் ஏராளமான உணவு இருக்கிறதே! காடு முழுக்கப் புற்கள், பழமரங்கள் நிறைய இருக்கின்றன. எத்தனையோ காய்களும் விதைகளும் குலுங்குகின்றன. அப்புறம் என்ன?”

‘‘ஆனாலும் எனக்கு மரியாதை வேண்டாமா? இந்த உலகத்திலேயே வேகமான முயல் என்று என்னை எல்லோரும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டாமா?”



“சரி, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வாழ்ந்த வேகமான மான், மிகப்பெரிய யானை, வலிமையான சிங்கம் என்று யாருடைய பெயராவது உனக்குத் தெரியுமா?”

“தெரியாது.”

‘‘அப்புறம் உன் பெயரை மட்டும் எல்லோரும் ஞாபகம் வைத்திருப்பார்கள் என்று எப்படி எதிர்பார்க்கிறாய்?” என்று துறவி கேட்க, பதில் சொல்லத் தெரியாமல் விழித்தது முயல். ‘‘சரி, யாருடன் பந்தயம் ஓடுகிறாய்?” என்று மீண்டும் கேட்டார் துறவி.

“ஆமையுடன் போட்டியிட்டு ஓடுகிறேன்.”

“இன்றைக்கு ஆமையிடம் உன் வேகத்தை நிரூபிக்க வேண்டும். நாளை ஒரு மான் வரும், இன்னொரு நாள் ஒரு சிறுத்தை வரும். வாழ்க்கை முழுக்க எல்லோருடனும் போட்டி போட்டு உன் வேகத்தை நிரூபித்தபடியே இருப்பாயா?” என்று துறவி கேட்டதும் முயல் யோசித்தது.

‘‘நீங்கள் சொல்வது சரிதான். என் கண்களைத் திறந்தீர்கள். யார் யாருடனோ போட்டி போடுவது என் வேலை இல்லை. என் வாழ்க்கையை நான் விரும்பியபடி வாழ்வதே சரி. நான் பந்தயத்திலிருந்து விலகுகிறேன்” என்று சொன்ன முயல், துறவிக்கு நன்றி சொல்லிவிட்டு அருவியில் போய் ஆனந்தமாகக் குதித்து விளையாடத் தொடங்கியது.

‘முயல் பந்தயத்தில் தோற்றிருக்கலாம். ஆனால், தன் வாழ்க்கையைத் திரும்பவும் பெற்றுவிட்டது’ என்று முடிவைச் சொல்கிறது இந்தக் கதை. அர்த்தமில்லாத போட்டிகளில் குதிக்காமல், மற்றவர்களைப் பார்த்து எதையும் செய்யாமல், வாழ்வில் விரும்பியதைச் செய்தால் ஜெயிக்க முடியும் என்பதுதான் இந்தக் கதை உணர்த்தும் நீதி.

உடலுக்கு நலம் தரும் பல உணவுகள் ருசியில் சற்றே குறைவாக இருக்கும். அதனால் குழந்தைகள் சாப்பிட மறுப்பார்கள். கஷ்டப்பட்டு அவற்றை ஊட்டுவது போலத்தான் நன்னெறிகளையும் ஊட்ட வேண்டும். கசப்பு மருந்துகளில் இனிப்பு தடவிக் கொடுப்பது போலத்தான், கதைகளின் நீதியைக் கலந்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். நன்னெறிகளை அறிவது வாழ்க்கைக்கு உதவும். எது சரி, எது தவறு என்று பிரித்துப் பார்க்க நன்னெறிகளே உதவுகின்றன. நன்மைக்கும் தீமைக்கும் நடுவே நின்று பார்த்து, நல்ல விஷயங்கள் பக்கம் நிற்கக் கற்றுக் கொடுக்கின்றன. எப்படிப்பட்ட மனிதர்களுடன் உறவு கொண்டாட வேண்டும் என்று உணர்த்துகின்றன.

குடும்பம், நட்பு வட்டம், பள்ளி, சமூகம், அரசாங்கம் என்று நன்னெறிகளை எங்கெங்கும் கற்றுக்கொள்ள முடியும். அவையே தினசரிப் பழக்கங்களாகவும், வாழ்க்கை லட்சியங்களாகவும் ஒவ்வொருவருக்கும் மாறும். ஒருவரின் நடத்தையை, பேச்சை, செயல்களை, குணத்தை அதுவே தீர்மானிக்கும். குழந்தைகள் வளர வளர, அந்த நன்னெறிகள் அவர்களுக்கு மதிப்பு ஏற்படுத்தும். எப்படிப்பட்ட மனிதராக ஒருவர் வருவார் என்பதை, அவர் பின்பற்றும் நெறிகளே முடிவுசெய்கின்றன. வாழ்க்கை முழுக்கச் சவால்களையும் பிரச்னைகளையும் எதிர்கொள்வதற்கு இந்த நன்னெறிகளே உதவுகின்றன.

**குழந்தைகளுக்கு நன்னெறி ஊட்டுவது எப்படி?**

- எந்தப் பழக்கத்தையும் இளவயதில் கற்றுக்கொடுத்தால், அது வாழ்நாள் பழக்கமாக மாறிவிடும். அடிப்படையான நல்ல பழக்கங்களைக் குழந்தையிலேயே கற்றுக்கொடுங்கள். ஏதாவது வேண்டும் என்றால், ‘ப்ளீஸ்’ என்று கனிவுடன் கேட்பதும், யாராவது உதவிகள் செய்தால் ‘நன்றி’ சொல்வதும் இயல்பான பழக்கமாகட்டும்.

- பெற்றோர்கள் சொல்லித் தருவதால் மட்டுமில்லை, பெற்றோர்கள் செய்வதைப் பார்த்தும் குழந்தைகள் கற்றுக்கொள்கின்றன. குழந்தைகள் பின்பற்ற வேண்டிய நல்ல பழக்கங்கள் பெரியவர்களிடமும் இருக்க வேண்டும். எல்லோரிடமும் கனிவாகப் பேசுவது, கோபம் குறைப்பது, எல்லாவிதங்களிலும் உதவியாக இருப்பது என்று குழந்தைகளுக்கு நல்ல ரோல் மாடலாக இருங்கள்.

- உங்கள் வாழ்க்கையில் நன்னெறிகளைப் பின்பற்றியது எப்படிப்பட்ட பலன்களைத் தந்தது என்று கதைகள் போல அவர்களிடம் சொல்லுங்கள். அவர்களும் அப்படிச் செய்வார்கள்.

- குழந்தைகள் நன்னெறிகளைப் பின்பற்ற உதவுங்கள். அவர்களின் நல்ல பண்புகளையும் நற்செயல்களையும் பாராட்டுங்கள். அது குழந்தைகளை ஊக்கப்படுத்தி சிறந்தவர்களாக அவர்களை மாற்றும். ●

## பொறுமையாகச் சொல்லிக் கொடுங்கள்!



அம்மா தலையணைகளுக்கு உறை போட்டுக்கொண்டே, குட்டி மகனுக்கு கூட்டல் கணக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். பலமுறை சொல்லியும், அவனால் அந்தக் கணக்குகளைச் சரியாகச் செய்ய முடியவில்லை. அம்மாவுக்கு ஆத்திரம் அதிகமாகி மகனைத் திட்ட ஆரம்பித்தார். அவன் மிரண்டு இன்னும் அழுதானே தவிர கணக்கைச் செய்வதாக இல்லை. ஒரு கட்டத்தில், "நீ படிக்கவே வேண்டாம்... போ. போய் விளையாடு" என்று அம்மா சலிப்புடன் சொன்னார்.

மகன் மேலுள்ள கோபத்தையெல்லாம் அம்மா தலையணை உறை போடுவதில் காட்டினார். தலையணையை உறைக்குள் திணித்து மேலே இழுத்துக் குலுக்கினார். அடுத்தடுத்து அப்படி இரண்டு தலையணைகளுக்கு உறை போடும்போதுதான் அதைக் கவனித்தார். ஆரம்பத்தில் தலையணையை அந்த உறைக்குள் மெல்லவே திணிக்கிறோம். மெல்லத் திணித்து அசைத்து உறைக்குள் தலையணை போனதும், அதை வேகமாக அழுத்துகிறோம் என்பதை கவனித்தார்.

'மெத்து மெத்தென்ற தலையணையை பட்டு போல இருக்கும் உறைக்குள் நுழைக்கவே ஆரம்ப கட்டத்தில் இவ்வளவு லாவகம் தேவைப்படும்போது, கூட்டல் கணக்கை ஏழு வயது மகனின் மூளையில் நுழைக்க எவ்வளவு பொறுமை தனக்கு இருக்க வேண்டும்! ஆனால் பொறுமையில்லாமல் மகனைத் திட்டிவிட்டோமே' என்று வருந்தினார்.

மகனை அன்புடன் அழைத்தார். கொஞ்ச நேரம் அவனுக்குப் பிடித்தது போல விளையாடிவிட்டு, நிதானமாக கூட்டல் கணக்கை சொல்லிக் கொடுத்தார். அவன் இப்போது ஓரளவுக்குப் புரிந்துகொண்டான். அடுத்த அரை மணி நேரத்தில் கூட்டல் கணக்கில் எதைக் கொடுத்தாலும் செய்யும் அளவுக்குத் தேறிவிட்டான்.

கற்பிக்கும் ஆசிரியருக்கும், பெற்றோருக்கும் இந்தப் பொறுமை வேண்டும். குழந்தைகள் என்னதான் குழம்பினாலும் பொறுமையாகத்தான் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

## பசித்தால் வருவார்கள்!

இளைய தலைமுறையினரைப் பூனைக்குட்டிகளுடன் ஒப்பிட்டு நிறைய விஷயங்களைச் சொல்வார்கள். பூனைக்கு என்னதான் நீங்கள் செல்லமாக ஒரு பெயர் வைத்து, அதைச் சொல்லிக் கூப்பிட்டாலும் பூனை உங்களைத் திரும்பிப் பார்க்காது. அலட்சியமாகவே இருக்கும். இளைஞர்களும் அப்படித்தான். நீங்கள் எவ்வளவுதான் பார்த்துப் பார்த்து எல்லாம் செய்தாலும், பூனைகளுக்கு அவை ஒரு பொருட்டாகவே தோன்றாது. 'இவர்கள் நமக்கு இதையெல்லாம் செய்யக் கடமைப்பட்டவர்கள்' என்பது போன்ற பாவனையுடன் இருக்கும். இளைஞர்களும் அப்படியே!

ஒரு பூனைக்குட்டி வீட்டை விட்டு வெளியில் செல்லும்போது அதனுடன் தாய்ப்பூனையோ, வேறு பெரிய பூனைகளோ இருக்காது. தனியாகவே செல்லும். பாதுகாப்புக் கருதி பெரியவர்கள் உடன் வருவதாகச் சொன்னாலும், இளைய தலைமுறை விரும்புவதில்லை. வெளியில் எங்கெங்கோ திரிந்துவிட்டு இரவில் தாமதமாக, சத்தமில்லாமல் வரும் பூனை போலவே இளைஞர்களும் வருவார்கள்.

ஒருநாள் இப்படித்தான் ஒரு பூனை வெளியில் போனது. இரவு வீடு திரும்பவே இல்லை. அதை வளர்த்தவர் பதறிவிட்டார். மறுநாள் அதிகாலையிலேயே பூனையைத் தேடிப் போனார். அது தோட்டத்தில் ஒரு மரக்கிளையில் உயரமான இடத்தில் இருந்தபடி 'மியாவ்' எனக் கத்திக் கொண்டிருந்தது. அவர் கூப்பிட்டாலும் அது கீழே இறங்கி வரவில்லை.

## சுயமாக யோசிக்க வேண்டும்!

எட்டுவயதுச்சிறுவன்வகுப்பறையில்அமர்ந்திருந்தான். அந்த வயதில் அவனுக்குப் பள்ளி மீதும், ஆசிரியர்கள் மீதும் மிகப்பெரிய வெறுப்பு இருந்தது. அன்று புது ஓவிய ஆசிரியர் டாய்ச்சிகோவா வந்தார்.

‘‘உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதை வரையுங்கள்’’ என்றார். இதைக் கேட்ட சிறுவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. வழக்கமாக ஓவிய ஆசிரியர்கள் கரும்பலகையில் ஒரு படத்தை வரைந்து, அதையே காப்பியடித்து மாணவர்களை வரையச் சொல்வார்கள். ஆனால் ஆசிரியர் டாய்ச்சிகோவா ‘சுயமாகப் படைத்துப் பாருங்கள்’ என்கிறார். இந்த விடுதலையே அவனைப் பரவசம் ஆக்கியது. சட்டென்று கலர் பென்சில்களை எடுத்து வரைகிறான். ஓவியம் ஓரளவுக்கு உயிர்பெற்றது. ஆனாலும் அதில் ஏதோ குறை இருந்தது போலத் தெரிந்தது. உடனே தண்ணீர் தொட்டுச் சில வண்ணங்களின் மீது வைத்து மெல்லத் தேய்த்தான். அது வித்தியாசமான வண்ண நிழல் உருவமாக நோட்டில் விழுந்தது.

அனைவரும் வரைந்து முடித்த பிறகு ஆசிரியர் டாய்ச்சிகோவா எல்லா ஓவியங்களையும் வாங்கிச் சுவரில் ஒட்டினார். இந்தச் சிறுவனின் ஓவியம் வித்தியாசமாகத் தெரிய, மற்ற மாணவர்கள் சிரித்தார்கள். ஆசிரியர் அவர்களைக் கண்டித்தார்.

‘‘ஈரம் தொட்டு வண்ணத்தைத் தேய்த்துவிட்டது அருமை. இப்படித்தான் படைப்பைச் சுயமாக ரசித்துப் படைக்க வேண்டும். யாராவது செய்வதைப் பார்த்துக் காப்பி அடிப்பது படைப்புத் திறன் ஆகாது’’ என்று சிறுவனைப் பாராட்டினார். அந்த வகுப்பில் அன்று வரைந்த ஓவியங்களில் மிகச் சிறந்த ஓவியமாக அதையே தேர்ந்தெடுத்தார். அன்றிலிருந்து அச்சிறுவன் எதைப் படைக்கும்போதும் வேறு யாரையும் கவனிப்பதில்லை. தன் சுய சிந்தனையையும் உணர்வையும் கொண்டே படைத்தான்.



ஜப்பான் நாட்டில் 100 வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் இது. அந்தச் சிறுவன் பிற்காலத்தில் வளர்ந்து உலகின் மிகச்சிறந்த இயக்குநர் ஆனார். இப்போதும் திரைப்படம் கற்றுக்கொள்ள வரும் மாணவர்கள், ‘தனித்தன்மையான திரைப்படங்களை எவ்வாறு எடுப்பது’ என்பதை அவரது திரைப்படங்களைப் பார்த்தே கற்றுக் கொள்கிறார்கள். அவர்தான் உலகின் தலைசிறந்த இயக்குநரான அகிரா குரோசோவா.

குழந்தைகளைச் சுயமாக யோசிக்கச் சொல்வதைப் போல அவர்களுக்குச் செய்யும் சிறந்த நன்மை எதுவுமில்லை.

‘இருட்டில் தெரியாமல் அது மரத்தில் ஏறிவிட்டது. இப்போது இறங்கும் வழி தெரியாமல்தான் மரத்தில் இருந்தபடிக் கத்திக்கொண்டிருக்கிறது’ என்று அவர் தவறாக நினைத்துவிட்டார். உடனடியாகத் தீயணைப்புத் துறைக்கு போன் செய்தார். போனை எடுத்த தீயணைப்பு வீரர் நல்ல அனுபவசாலி. அவர் நிதானமாக, ‘‘ஒன்றும் கவலைப்படாதீர்கள். பூனைகளுக்கு நம்மைவிட நன்றாக மரம் ஏறத் தெரியும். அது இறங்கத் தெரியாமல் பயந்துபோய் கத்தவில்லை. பொழுதுபோக்காகக் கத்துகிறது. சீக்கிரம் தானாகவே இறங்கி வந்துவிடும்’’ என்றார்.



வீட்டுக்காரர் சமாதானம் ஆகாமல், ‘‘எப்போது அது இறங்கிவரும்?’’ என்று கேட்டார். ‘‘அதற்குப் பசிக்கும்போது தானாக இறங்கிவரும்’’ என்றார் தீயணைப்பு வீரர். அவர் சொன்னது போலவே ஒரு மணி நேரத்தில் பூனை இறங்கி வீட்டுக்கு வந்து பால் குடித்தது.

பிள்ளைகளை நினைத்துக் கவலைப்படாதீர்கள். அவர்களுக்கு அறிவுப்பசி, அன்புப்பசி ஏற்படும்போது நிச்சயம் பெரியவர்களை வந்தடைவார்கள்.



# மூன்று அறிவுரைகள்!

திருமணமான இளம் தம்பதி ஒரு கிராமத்தில் இருந்தார்கள். வளங்கள் இல்லாத அந்த ஊரில் வருமானத்துக்கு வழியில்லை. அதனால் தொலைதூர நகரத்துக்குப் பிழைப்புத் தேடிச் செல்ல முடிவெடுத்தான் இளைஞன். “ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து கடினமாக உழைத்து நிறைய பணத்துடன் திரும்பி வருவேன். எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று தெரியாது. எனக்காகக் காத்திரு” என்று சொல்லிவிட்டு அவன் கிளம்பினான்.

வாகன மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் அவன் 20 நாட்கள் நடந்து ஒரு நகரத்தை அடைந்தான். அங்கு பல்வேறு தொழில்களையும் செய்துவந்த ஒரு பண்ணையாரிடம் வேலை கேட்டான். “எனக்கு வீட்டுக்குப் போக வேண்டும் என்று தோன்றும்போது என்னை அனுப்பிவிடுங்கள். அதுவரை என் சம்பளத்தை நீங்களே சேர்த்து வையுங்கள். நான் மொத்தமாக ஊருக்குப் போகும்போது வாங்கிக்கொள்கிறேன்’’ என்றான். பண்ணையாரும் சம்மதித்தார்.

அங்கு அவனுக்குத் தங்குமிடமும் கொடுத்தார்கள், மூன்று வேளை உணவும் கிடைத்தது. கடுமையாக உழைத்த அவன் மீது பண்ணையாருக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டது. விரைவிலேயே அவருக்கு நெருக்கமானான். அந்தப் பண்ணைக்குக் கிட்டத்தட்ட நிர்வாகி போலவே அவன் இருந்தான்.

18 ஆண்டுகள் கழித்து, தான் ஊருக்குப் போக விரும்புவதாகப் பண்ணையாரிடம் சொன்னான். “சரி, உன் இத்தனை ஆண்டு உழைப்பிற்கான சம்பளம் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. உனக்குப் பணம் வேண்டுமா? அல்லது நான் சொல்லப் போகும் மூன்று அறிவுரைகள் வேண்டுமா? இரண்டில் ஒன்றை மட்டுமே நான் கொடுப்பேன். வழியில் கொள்ளையர்கள் இருக்கக்கூடும், பணம் பறிபோகலாம். அறிவுரைகள் காலத்துக்கும் உன் வாழ்க்கையில் வழிகாட்டும். எது வேண்டும் என்று யோசித்து நாளை காலையில் சொல்” என்றார் பண்ணையார்.

இரவு முழுக்க அவன் யோசித்தான். பணத்தை எடுத்துப் போய் வழியில் திருடர்களிடம் பறிகொடுப்பதைவிட, அறிவுரையே பரவாயில்லை என்று தீர்மானித்தான். இத்தனை ஆண்டுகள் உழைத்துவிட்டு வெறுங்கையுடன் ஊர் திரும்புவதை நினைத்து அவனுக்குக் கவலையாக இருந்தது. ஆனாலும், தன் மீது இத்தனைக் காலம் அன்பாக இருந்த பண்ணையார், தன் நன்மைக்காகவே எதையும் சொல்வார் என்று நம்பினான்.

அடுத்த நாள் அவரிடம் போய் நின்று, “எனக்குப் பணம் வேண்டாம். அறிவுரைகள் வேண்டும்” என்றான். பண்ணையார் சிரித்தபடி மூன்று அறிவுரைகளை அவனுக்குச் சொன்னார்.

1. வாழ்க்கையில் எப்போதும் குறுக்குவழிகளில் போகாதே. அறியாத பாதைகளில் திடீரெனப் போவது உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடும்.

2. அவசரப்பட்டு எந்த விஷயத்திலும் தலையை நுழைக்காதே. அது கெட்ட விஷயமாக இருந்தால் உன்னைக் காவு வாங்கிவிடும்.

3. கோபத்திலும் வலியிலும் இருக்கும்போது எந்த முடிவையும் எடுக்காதே. பின்னால் நீ அதற்காக வருந்தினாலும், அந்த முடிவால் இழந்ததைத் திரும்பப் பெற முடியாது.

இந்த மூன்று அறிவுரைகளைச் சொன்ன பண்ணையார், "நடந்து போனால் ஊர் சேர நீண்ட காலம் ஆகும். நான் மாட்டு வண்டி தருகிறேன். 10 நாட்களில் போய்விடலாம்" என்று இளங்காளை பூட்டிய வண்டியை அவனுக்குக் கொடுத்தார். வழியில் உணவு சாப்பிடுவதற்கும், சத்திரத்தில் தங்குவதற்கும் பணம் கொடுத்தார். அவர் வீட்டில் சமைத்த பெரிய கேக் போன்ற ஓர் உணவை ஒரு பாத்திரத்தில் போட்டு அவனிடம் நீட்டினார். "எவ்வளவு பசி எடுத்தாலும் இதை வழியில் சாப்பிடாதே, வீட்டுக்குப் போனதும் உன் மனைவியுடன் உட்கார்ந்து சாப்பிடு. அதுவே மகிழ்ச்சியைத் தரும்" என்றார்.

அவர் சொன்ன எதையுமே அவன் மறுத்ததில்லை. அதேபோலவே செய்வதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினான். முதல் நாள் பயணம் முடியும் நேரத்தில் வழிப்போக்கன் ஒருவன், "நானும் உன் வண்டியில் வரட்டுமா?" என்று கேட்டு ஏறிக்கொண்டான். இவன் போகும் ஊர் பற்றி விசாரித்த வழிப்போக்கன், "அதற்கு ஏன் நெடுஞ்சாலை வழியே போகிறாய்? 10 நாள் ஆகுமே. பக்கத்தில் மலைகள் நடுவே ஒரு காட்டுப்பாதை போகிறது. அதில் போனால் நான்கே நாட்களில் ஊர் போய்ச் சேரலாம்" என்றான்.

அவன் சொன்ன வழியில் போவதற்கு வண்டியைத் திருப்பியவனுக்கு, பண்ணையார் சொன்ன முதல் அறிவுரை ஞாபகத்துக்கு வந்தது. குறுக்குவழி ஆபத்து. "எத்தனை நாட்கள் ஆனாலும் பரவாயில்லை. நான் நேர்வழியிலேயே போகிறேன்" என்று திரும்பிவிட்டான்.



இரண்டு நாட்கள் கழித்து ஒரு சத்திரத்தில் இரவு தங்குவதற்காக நின்றபோதுதான், அந்த மலைப்பாதையில் நிலச்சரிவு ஏற்பட்டு நிறைய பேர் இறந்துபோனதை அறிந்தான். பண்ணையாரின் அறிவுரை தன்னைக் காப்பாற்றியது என்று பெருமூச்சுவிட்டான்.

சத்திரத்தில் இரவு சாப்பிட்டுவிட்டுத் தூங்கும்போது, அறையின் பின்பக்கம் ஏதோ சத்தம் கேட்டு விழித்தான். விநோதமான ஒரு கூக்குரல் கேட்டது. தூக்கக் கலக்கத்தில் கதவைத் திறக்கப் போனவனுக்கு பண்ணையாரின் இரண்டாவது அறிவுரை நினைவுக்கு வந்தது. 'அவசரப்பட்டு எந்த விஷயத்திலும் தலையை நுழைக்காதே.' சத்தம் கேட்டால் கேட்கட்டும் என்று படுத்துத் தூங்கிவிட்டான்.

மறுநாள் காலையில் சத்திர உரிமையாளரிடம் அந்தச் சத்தம் பற்றிச் சொன்னான். "நல்லவேளை, நீங்கள் கதவைத் திறக்கவில்லை. வழிப்பறிக் கொள்ளையர்கள் இப்படித்தான் சத்தம் போடுவார்கள். கதவைத் திறந்திருந்தால் உங்களைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டு, உங்களிடம் இருப்பதை எல்லாம் பிடுங்கியிருப்பார்கள்" என்றார் அவர். அறிவுரை சொன்ன பண்ணையாருக்கு மீண்டும் நன்றி சொன்னான்.

மேலும் சில நாட்கள் பயணம் செய்து ஓர் இரவு நேரத்தில் சொந்த ஊருக்கு வந்தடைந்தான் அவன். வீட்டை நெருங்கும்போது அவன் கண்ட காட்சி அதிர்ச்சி தந்தது. வீட்டில் எரியும் விளக்கு வெளிச்சத்தில் அவன் மனைவி யாரையோ கட்டி அணைத்தபடி இருப்பது வாசல் திரைச்சீலை வழியே தெரிந்தது. உடனே உள்ளே போய் இருவரையும் கொன்றுவிடத் துடித்தான். 'ஆத்திரத்தில் முடிவெடுக்காதே' என்ற பண்ணையாரின் அறிவுரை நினைவுக்கு வந்தது.

அமைதியாக உள்ளே போனான். அவனைக் கண்டதும் சந்தோஷக் கூச்சல் போட்ட மனைவி, தான் அணைத்திருந்த இளைஞனிடம் "டேய், உன் அப்பா வந்துட்டாருடா" என்றாள். அவன் ஊருக்குக் கிளம்பிய பிறகுதான் மனைவி கர்ப்பமாக இருந்தது தெரியவந்தது. அதன்பின் பிறந்த மகன் இப்போதுதான் அப்பாவைப் பார்க்கிறான். பண்ணையாரின் மூன்றாவது அறிவுரையும் தன்னைக் காப்பாற்றியதை அவன் உணர்ந்து அவருக்கு மனசுக்குள் நன்றி சொன்னான்.

பண்ணையார் கொடுத்திருந்த உணவைச் சாப்பிட மூன்று பேரும் உட்கார்ந்தார்கள். பாத்திரத்திலிருந்து எடுத்து அதை உடைத்தபோது, உள்ளிருந்து தங்கக்கட்டிகள் வந்து விழுந்தன. அவனுக்குத் தரவேண்டிய சம்பளத்தைவிட அதிகமாகவே பாதுகாப்பாக அதற்குள் தங்கமாக வைத்திருந்தார் பண்ணையார்.

அறிவுரைகள் எப்போதும் நம்மைக் காக்கும்!



## சின்ன பாவம்... பெரிய பாவம்!

ஒரு ஞானியிடம் இரண்டு பேர் வந்தனர். முதல் மனிதன், "நான் ஒரு பெரிய பாவம் செய்துவிட்டேன். என் மனம் அதை நினைத்து தினமும் துடிக்கிறது. என் பாவத்திலிருந்து மீள முடியுமா?" என்று கேட்டான். அடுத்தவனோ, "நான் இவர் அளவுக்குப் பெரிய பாவம் எதுவும் செய்யவில்லை. சின்னச் சின்ன தவறுகள், சிறு ஏமாற்று வேலைகள் நிறைய செய்துள்ளேன். கடவுள் தண்டிக்கும் அளவுக்கு இவை எல்லாம் பெரிய பாவங்களா என்ன?" என்றான்.

ஞானி இருவரையும் பார்த்தார். முதல் நபரிடம், "நீ போய் பெரிய பாறை ஒன்றைத் தூக்கி வா" என்றார். இரண்டாமவரிடம் ஒரு கூடையைக் கொடுத்து, "போய் இந்தக் கூடை நிறைய சிறு கற்களைப் பொறுக்கி வா" என்றார். இருவரும் அப்படியே செய்தனர்.

இப்போது ஞானி, "சரி, இருவரும் கொண்டு வந்தவற்றைச் சரியாக எந்த இடத்தில் எடுத்தீர்களோ, அங்கேயே திரும்பப் போட்டுவிட்டு வாருங்கள்" என்றார். முதல் நபர் அந்தப் பாறையைத் தூக்கிக்கொண்டு கிளம்பினான்.

## யாரும் தடுக்க முடியாது!

ஒரு சிறுவனுக்குப் பள்ளியின் டென்னிஸ் அணியில் சேர்ந்து விளையாட வேண்டும் என்பது கனவு. அந்தப் பள்ளியில் உருவான சிலர் உலகப்புகழ் பெற்ற வீரர்களாக மாறி, பணமும் பெயரும் சம்பாதித்திருக்கிறார்கள். அவர்களைப் போல ஆக நினைத்தான்.

ஆனால், பணத்தைக் கொட்டி எங்கும் பயிற்சியில் சேரவோ, விலையுயர்ந்த ராக்கெட்டும் பந்துகளும் வாங்கிப் பயிற்சி பெறவோ அவனுக்கு வசதியில்லை. வீட்டிலேயே தினமும் மணிக்கணக்கில் பயிற்சி எடுத்தான். சுமாரான டென்னிஸ் ராக்கெட் ஒன்றை வாங்கி, பந்தைச் சுவரில் அடித்துப் பயிற்சி செய்தான். சில வாரங்களிலேயே, சுவரில் அடித்த பந்து எப்படி வந்தாலும் அதைத் திருப்பி அடிக்க அவன் பழகிக்கொண்டான். எவ்வளவு மோசமாகப் பந்து வந்தாலும் அவனால் திருப்பி அடிக்க முடிந்தது.

அந்த ஆண்டு பள்ளி அணியில் அவனைத்தான் முதலில் சேர்த்தார் கோச். அதற்கு அவர் சொன்ன காரணம், "உனக்கு நேர்த்தியாக விளையாடத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு பந்தையும் திருப்பி அடிக்கிறாய். ஜெயிப்பதற்கு அதுதான் முக்கியம்."

உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் ஒரு விஷயத்தை ஒருவர் செய்துகொண்டே இருந்தால், அவர் நிச்சயம் ஜெயிக்க முடியும்.



## ஏன் சண்டை?

ஜென் துறவி ஒருவர் இருந்தார். புகழ்பெற்ற அறிஞராக இருந்தாலும், அவர் யாசகம் செய்தே தன் பசியைப் போக்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு நாள் அப்படி கிராமத்தில் ஒரு பணக்காரர் வீட்டில் யாசகம் பெறச் சென்றார். இந்தத் துறவியின் சக்தியைப் பணக்காரர் அறிவார். அவர் துறவியைப் பணிந்து வணங்கி, அவருக்குச் சிறந்த உணவைக் கொடுத்தார்.

அதன்பின் அவரிடம், ''சுவாமி, மனிதர்கள் ஏன் சண்டை போட்டுக்கொள்கிறார்கள்? அமைதியான வாழ்க்கை சாத்தியம் இல்லையா?" என்று கேட்டார். அதற்குத் துறவி, "எனக்கு உணவு பெறவே இங்கு வந்தேன். உங்கள் கேள்விக்குப் பதில் சொல்ல வரவில்லை" என்றார். பணக்காரருக்கு வந்ததே கோபம்! "என்ன பழக்கம் இது? உணவு கொடுத்த என்னிடம் இப்படித்தான் பேசுவீர்களா? உங்களைப் போய் பெரிய அறிஞர் என்கிறார்களே?" என்று ஆரம்பித்து மோசமான வார்த்தைகளால் திட்டினார்.

இரண்டாமவன் தயக்கத்துடன், "இவ்வளவு கற்களை நான் எப்படி சரியாக எடுத்த இடத்திலேயே வைக்க முடியும்?" என்று கேட்டான்.

ஞானி சிரித்தார். பிறகு சொன்னார். "அவன் பெரிய தவறு செய்தான். அதற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டுப் பரிகாரம் செய்து அதிலிருந்து மீட்சி அடையலாம். நீ சின்னச் சின்னதாக நிறைய தவறுகள் செய்தும், அவை பாவம் என்றுகூட உணரவில்லை. உன்னால் யாரெல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பதுகூட உனக்கு நினைவிருக்காது. உனக்குத்தான் வாழ்வில் மீட்சியும் நிம்மதியும் மிகக் கடினம்!"

தவறுகளில் சின்னது, பெரியதெல்லாம் இல்லை. தவறு தவறுதான்... அதை உணர்ந்து சரிசெய்ய வேண்டும்.



சில நிமிடங்கள் அதையெல்லாம் அமைதியாகக் கேட்ட துறவி, "நீங்கள் விரும்பாத ஒரு பதிலைச் சொன்னதும் உங்களுக்குக் கோபம் வந்தது. மோசமாகப் பேசினீர்கள். நானும் அதேபோல மோசமாகப் பேசியிருந்தால் சண்டை வந்திருக்கும். கோபம்தான் எல்லாச் சண்டைகளுக்கும் காரணம். கோபம் தவிர்த்தால் அமைதியான வாழ்க்கை சாத்தியம். இதை உணர்த்தவே அப்படிப் பேசினேன்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம் கோபப்பட்டு பெரிய சண்டைகளைப் போட்டுவிடுகிறோம். சில நிமிட கோபத்தைத் தவிர்த்தால், பல ஆண்டு மன அமைதி கிடைக்கும்.



## வாழ்வின் தவிர்க்க இயலாத நியதிகள்!

- நீங்கள் நல்லது செய்தாலும், கெட்டது செய்தாலும், மனிதர்கள் உங்கள் முதுகுக்குப் பின்னால் பேசுவதைத் தவிர்க்க முடியாது.
- அது நல்ல நிலையோ, கெட்ட நிலையோ, இந்த நிலையும் மாறும் என நம்புங்கள்.
- நல்லவர்களே அதிகம் கஷ்டப்படுவதாகத் தோன்றும். காரணம், நல்லவர்கள்தான் மனசாட்சியின் கேள்விகளுக்குப் பயப்படுகிறார்கள். அதனால்தான் இந்தக் கஷ்டம் வருகிறது.
- குடும்ப வாழ்க்கையிலும் தொழில் வாழ்க்கையிலும் சமநிலையைக் கடைப்பிடிக்கத் தெரிந்தவர்களுக்கு இந்த வாழ்க்கை அழகாக இருக்கும்.
- 'இவர் இல்லாமல் எனக்கு வாழ்க்கை இல்லை' என எவரைப் பற்றியும் நினைக்காதீர்கள். வாழ்க்கை அதன் போக்கில் எல்லாவற்றையும் மாற்றிவிடும்.
- வாழ்வில் எல்லாப் பிரச்னைகளுக்கும் ஏதோ ஒரு தீர்வு இருக்கிறது.
- நம்பிக்கைகளையும் வாக்குறுதிகளையும் காப்பாற்றுங்கள். ரகசியங்களை ரகசியங்களாகவே வைத்திருங்கள். நிம்மதியான வாழ்க்கை சாத்தியம்.
- தற்காலிகமான இந்த உலகில் பெயர், புகழ், பணம் எல்லாம் தற்காலிகம்தான். எல்லாவற்றையும் இழந்த பிறகே இதைப் பலரும் உணர்கிறார்கள்.

# குழந்தைகளுக்கு போன் வரமா, பிரச்னையா?

சாப்பிட அடம்பிடிக்கும் குழந்தைக்கு மொபைல் போனில் கார்ட்டூன் வீடியோக்களைக் காட்டியபடி ஊட்டிவிடுகின்றனர் அம்மாக்கள். குழந்தை அழும்போதெல்லாம் அதன் கையில் செல்போனைக் கொடுத்து எதையாவது பார்க்கச் சொல்லிச் சமாதானப்படுத்துகின்றனர் பெற்றோர்கள். வளர்ந்த பிறகு தன் கையில் போனைக் கொடுக்குமாறு குழந்தைகள் அழும்போதுதான் வருகிறது பிரச்னை.

“என் செல்போனை எதுக்கு எடுத்தே? அங்கேயே வை” என்று அதட்டுவதும், “எந்த நேரமும் செல்போன்லயே என்ன விளையாட்டு?” என்று மிரட்டுவதும் குழந்தைகளை நோகச் செய்கிறது. குழந்தைகள் விஷயத்தில் போனுக்கான வரையறை என்ன என்று புரியாமல் பல பெற்றோர்கள் குழம்புகிறார்கள்.

பச்சிளம் குழந்தைகளுக்கு செல்போனைக் கொடுக்கவே கூடாது. செல்போனின் ஒளிர்திரையைப் பார்க்கும் அளவுக்கு அவர்கள் கண்களின் வளர்ச்சி முழுமை அடைந்திருக்காது. தூரத்தில் இருக்கும் டி.வி–யை வேண்டுமானால் அவர்கள் சில நிமிடங்கள் பார்க்கலாம். ஆனால், முகத்துக்கு அருகில் செல்போன் கூடவே கூடாது.

வளரும் பருவத்தில் குழந்தைகளுக்கு செல்போனில் கார்ட்டூன் கேரக்டர்களை அறிமுகம் செய்வதைவிட, நிஜ வாழ்வின் மனிதர்களை அறிமுகம் செய்வதே சிறந்தது. கார்ட்டூன் கேரக்டர்கள் அவர்களுடன் உரையாடுவதில்லை. அவை பேசுவதைக் குழந்தைகள் மௌனமாகக் கேட்க வேண்டியுள்ளது. இதனால் குழந்தைகளின் பேச்சுத்திறனும், சமூகத்தில் பழகும் திறனும், சிந்திக்கும் திறனும் வளர்வதே இல்லை. சக மனிதர்களுடன் உரையாடுவதும், வெளியிடங்களுக்குச் செல்வதும் அவர்களுக்கு பல்வேறு அனுபவங்களைத் தருகிறது. அந்த அனுபவங்களிலிருந்து தங்களுக்கு எழும் சந்தேகங்களை அவர்கள் கேள்விகளாகக் கேட்கிறார்கள். அதற்குப் பெற்றோரும் மற்றவர்களும் தரும் பதில்களே அவர்களின் அறிவுத்திறனை வளர்க்கின்றன.

குழந்தைகளுக்கு செல்போனைக் கொடுக்காமல், பெற்றோரும் மற்றவர்களும் அதிலேயே மூழ்கியிருப்பது நல்ல பழக்கம் இல்லை. குழந்தை தன்னுடன் அம்மாவும் அப்பாவும் உரையாட வேண்டும் என எதிர்பார்க்கும். அந்த நேரத்தில் அவர்கள் தங்கள் போனில் வாட்ஸ் அப்பிலோ, இன்ஸ்டாகிராமிலோ மூழ்கியிருந்தால், போனில்தான் வாழ்வின் சுவாரசியம் இருக்கிறது என்று குழந்தை நினைத்துக்கொள்ளும். தானும் போனைத் தட்டிப் பறிக்க ஆசைப்படும். குழந்தை விழித்திருக்கும் நேரத்தில் குழந்தையுடன் உறவாடுங்கள். அவர்கள் இளம்வயதில் நீண்ட நேரம் தூங்குவார்கள். அப்போது பெற்றோர்கள் செல்போனைப் பயன்படுத்தலாம்.

வளர வளர குழந்தைகளுக்கு செல்போனின் தொழில்நுட்பம் பழகிவிடும். சொல்லப்போனால், பெரியவர்களைவிட வேகமாக அவர்கள் எல்லாவற்றையும் கற்றுக்கொள்வார்கள். உங்களது செல்போன் எவ்வளவு நவீனமானதாக இருந்தாலும் சரி, அதில் குறைந்தபட்சம் 10 ஆப்ஷனுக்கு மேல் நீங்கள் பயன்படுத்த யோசித்துக்கூட இருக்க மாட்டீர்கள். உங்கள் குழந்தைகள் உங்களை விட அப்டேட்டட். அதிகபட்சம் 80 சதவிகிதம் உங்களது செல்போனைப் பலவிதமான பணிகளுக்கும் பயன்படுத்தி



வியக்க வைப்பார்கள். ஏனெனில், அவர்கள் ஸ்மார்ட்போன் பிறந்த இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்கள்.

இந்தக் காலத்தில் இளம் வயதிலேயே ஆன்லைன் வகுப்புகள் இயல்பாகிவிட்டன. செய்ய வேண்டிய ஹோம் ஒர்க், புராஜெக்ட்கள் என்று பலவற்றையும் வாட்ஸ்அப் மூலம் அனுப்பும் வழக்கம் வந்திருக்கிறது. ஒரேயடியாக அவர்கள் கையில் போனையே கொடுக்காமல் வளர்க்கப் பார்ப்பது இப்போது சாத்தியமில்லை. அப்படிச் செய்தால், சக குழந்தைகளைவிட அவர்கள் தொழில்நுட்ப அறிவில் பின்தங்கி விடுவார்கள். அது அவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும்.

ஆனால், இந்தப் பயன்பாட்டில் சில பிரச்னைகளும் உள்ளன. பள்ளிக் குழந்தைகள் இன்று படிப்பதற்காகப் பயன்படுத்தும் செல்போன், லேப்டாப் மற்றும் கம்ப்யூட்டர் ஆகியவற்றில் உள்ள சமூக வலைதளங்கள் அவர்களை நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் பாதிக்கின்றன. பெரும்பாலான குழந்தைகள் சோஷியல் மீடியா அடிமைகளாக மாறி, அதிலேயே மூழ்கித் தொலைந்து போகின்றனர்.

விபரீத விளையாட்டுகளை நம்பி உயிரையே விடுவது, விளையாடுவதற்காக அம்மாவின் பேங்க் அக்கவுண்டைக் காலி செய்வது, முகநூல் நட்பில் தன்னையே தொலைப்பது என இவர்களின் வலையாடல் சைபர் க்ரைமில் போய் முடிகிறது. சோஷியல் மீடியாவை மாணவர்கள் பயன்படுத்துவதில் உள்ள சாதக பாதகங்களைப் புரிந்துகொண்டு அவர்களை நெறிப்படுத்த வேண்டும்.

ஆரோக்கியமான மாற்றத்துக்காகப் பயன்படுத்தும் வரை சோஷியல் மீடியா வரமே. ஆன்லைன் விளையாட்டுகளைக் கற்றுக்கொள்ளும் குழந்தைகள், அதற்கு அடிமையாவது ஆபத்து. ஆன்லைன் விளையாட்டுகள் அவர்களை அடிமைகளாக மாற்றிவிடுவதும் அவர்களது சிந்தனையைப் பாதிக்கிறது. அவர்கள் நேரம் மொத்தமும் கொல்லப்படுவதுடன், ஒரே இடத்தில் உட்கார்ந்தபடி விளையாட முடங்குவதால் எடை கூடுகிறது. வளர் இளம்பருவத்தில் இருப்பவர்கள் முகநூல் உரையாடலில் முகம் தெரியாதவர்களிடம் ஈர்ப்பு ஏற்பட்டு தவறான பாதையில் போகின்றனர்.

அதே சமயம் சில நல்ல விஷயங்களும் சமூக வலைதளங்களால் உண்டு. ஆன்லைன் வகுப்புகளில் புரியாத பாடங்களை யூடியூபில் வேறு ஆசிரியர்கள் நடத்துவதைப்பார்த்துமாணவர்கள் கற்றுக்கொள்கின்றனர். புதுமையான கற்றுக்கொள்ளல் முறைகளில் நிறைய பாடங்களும் அதில் கிடைக்கின்றன. இப்படி பாசிட்டிவான விஷயங்கள் சோஷியல் மீடியாவில் இருந்தாலும், குழந்தைகளுக்கான எல்லைக் கோடுகளை உருவாக்க வேண்டியது பெற்றோரின் கடமை. குழந்தைகளின் ரோல் மாடலாக இவர்களே மாற வேண்டும்.



- செல்போன் பயன்பாட்டில் நேரக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது. குழந்தைகளுடன் உரையாடும் நேரத்தில் செல்போனுக்கு நோ சொல்வது, சில வேலைகளின்போது சைலன்ட் மோடில் வைப்பது எனக் குடும்பமே பழக்கப்படலாம்.

- அவர்களுக்குப் பிடித்த வேறு விளையாட்டுகளைக் கற்றுத் தருவது, ஹோம் கார்டனிங், யோகா, டைம் மேனேஜ்மென்ட் என அவர்களைப் பழக்கப்படுத்துவது சோஷியல் மீடியா குறித்த பாசிட்டிவ் மோடுக்கு மாற்றும்.

- குழந்தைகளின் ஆன்ஸ்க்ரீன் நேரத்தைக் குறைக்க விளையாட்டு, உடற்பயிற்சி மற்றும் டான்ஸ் என அவர்களுக்குப் பிடித்தவற்றில் நேரம் செலவிடக் குழந்தைகளைப் பழக்கப்படுத்தலாம்.

- செல்போனில் வரும் பொய்யான குறுந்தகவல்களை எப்படிக் கையாள்வது என கற்றுத் தரலாம். வங்கிகள் அனுப்பும் அலர்ட் குறுந்தகவல்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

- சோஷியல் மீடியாவில் வரும் விளம்பரங்களில் காட்டப்படும் உணவுகளில் ஆரோக்கியமானதை அனுமதியுங்கள். பணத்தைத் தேவையின்றிச் செலவழிப்பதை எப்படித் தவிர்க்கலாம் என்பதையும் உதாரணங்களுடன் கற்பிக்கலாம். தம் நண்பர்களுக்கு நிகழ்ந்த மோசடி அனுபவங்களையும் குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

- அவர்கள் விரும்பும் துறைகளில் என்னென்ன படிக்கலாம், எப்படியான வேலைகளுக்குச் செல்லலாம் என்பதை அவர்களுடன் சேர்ந்து பெற்றோரும் தேடலாம்.

- குழந்தைகளின் வயதுக்கு ஏற்ப சைபர் க்ரைம்கள் எப்படியெல்லாம் நடக்கலாம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். தனக்குப் பிடிக்காதவற்றை யாராவது கட்டாயப்படுத்தினால், தவறானவற்றை அனுப்பினால், பெற்றோரிடம் தெரிவிக்கத் தயார்படுத்தலாம். பெற்றோர் எந்தச் சூழலிலும் பாதுகாப்போம் என்ற நம்பிக்கை அளிப்பதும் அவசியம்.

உங்களது குழந்தைகள் வெற்றி வாகை சூட சோஷியல் மீடியாவும் ஒரு கருவியாக மாறட்டும். ●



# திரும்பக் கிடைக்கும்!

விபத்தில் பலத்த காயமடைந்த ஒருவர், மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்பட்டார். அவர்கள் குடும்பத்துக்கு அவ்வளவாக வசதியில்லை என்றாலும், அருகிலிருந்த ஒரே தரமான மருத்துவமனை என்பதால் அந்தத் தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்கள். நியாயமான கட்டணத்தில் தரமான சிகிச்சை தரும் இடமாக அந்த மருத்துவமனை பெயர் வாங்கியிருந்தது.

அவருக்கு உடனடியாக ஆபரேஷன் செய்ய வேண்டும். மருத்துவமனையின் உரிமையாளரான தலைமை டாக்டர்தான் அந்த ஆபரேஷனைச் செய்வார் என்றார்கள். அதனால், எவ்வளவு செலவாகுமோ என்று குடும்பத்தினர் பயந்துகொண்டிருந்தார்கள்.

அந்த நோயாளியை உள்ளே தூக்கி வரும்போதே தற்செயலாகத் தலைமை டாக்டர் அவர் முகத்தைப் பார்த்தார். அதிர்ச்சி அடைந்தவர், உடனடியாக அவரை ஆபரேஷன் தியேட்டருக்குக் கூட்டிப் போய் ஆபரேஷனை வெற்றிகரமாக முடித்தார். "இவரை நன்றாக கவனித்துக்கொள்ளுங்கள். இவர் குடும்பத்தினரிடம் இப்போது எதற்காகவும் பணம் வாங்க வேண்டாம்" என்று உத்தரவு போட்டுவிட்டுச் சென்றார்.

நான்கைந்துநாட்களில் அவர் ஓரளவுநலமாகிஸ்பெஷல் வார்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தங்களிடம் இன்னும் பணம் கேட்கவில்லையே என்று குடும்பத்தினருக்குக் குழப்பம். நர்ஸிடம் அவர் மனைவி விசாரித்தார். "ஒருவேளை கடைசியில மொத்தமா வாங்கிப்பாங்க போல" என்றார் நர்ஸ். 'தனக்கான சிகிச்சைக்கு எவ்வளவு பில் வரும்' என்று அவர் கேட்டார். சுமார் ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் கணக்கு சொன்னார்கள். விபத்தில் பட்ட காயங்களின் வலியைவிட இது அவருக்குப் பெரிய கவலையாக இருந்தது.

தலைமை டாக்டர் தினமும் வந்து அவரை நலம் விசாரிப்பார். மருந்துகள், சாப்பாடு என்று எல்லாமே கொடுப்பார்கள். பணத்துக்கு என்ன செய்வது என்று நோயாளிக்கும் அவர் மனைவிக்கும் கவலையாக இருந்தது. யார் யாரிடம் கடன் கேட்கலாம் என்று கணக்குப் போட்டார்கள். வீட்டை விற்கலாமா, அல்லது அடமானம் வைக்கலாமா என்றெல்லாம் யோசித்தார்கள்.

இரண்டு வாரங்கள் கழித்து நோயாளியையும் அவர் மனைவியையும் தன் அறைக்கு அழைத்த தலைமை மருத்துவர், சிகிச்சைக்கான பில்லைக் கொடுத்தார். அதில் ஐந்தரை லட்சம் ரூபாய் என்று அச்சிட்டிருந்த தொகை அடிக்கப்பட்டு, 'கடவுளின் கணக்கிலிருந்து பணம் செலுத்தப்பட்டது' என்று எழுதியிருந்தார் தலைமை டாக்டர்.

நோயாளி குழப்பமாக அவரைப் பார்க்க, "தம்பி, என்னை அடையாளம் தெரியவில்லையா?" என்று டாக்டர் கேட்டார். "எங்கேயோ பார்த்த மாதிரி தெரிகிறது. ஆனால் எங்கே என்று ஞாபகம் இல்லை..." என்றார் நோயாளி.

டாக்டர் அந்த சம்பவத்தைச் சொன்னார். "பத்து வருஷங்களுக்கு முன்னால், நான் குடும்பத்துடன் சுற்றுலா போனேன். காட்டு வழியில் திடீரென கார்

பழுதாகி நின்றுவிட்டது. ஆள் நடமாட்டம் இல்லாத ரோடு. செல்போனிலும் சிக்னல் இல்லை. உதவிக்கு வரவும் யாரும் இல்லை. இருட்ட ஆரம்பித்திருந்தது. ஆபத்தான விலங்குகள் நடமாடும் இடத்தில் என்ன ஆகுமோ என்று குழந்தைகள் அழ ஆரம்பித்து விட்டார்கள்.

சிறிது நேரத்தில் நீங்கள் அந்த வழியாக பைக்கில் வந்தீர்கள். நான் கூப்பிடாமலே அருகில் வந்து பைக்கை நிறுத்திவிட்டு, 'என்ன பிரச்னை' என்று கேட்டீர்கள். 'நான் கார் மெக்கானிக்தான், சரி பண்ணிடறேன்' எனக் குழந்தைகளுக்குத் தைரியம் சொல்லிவிட்டு, காரின் முன்பக்கத்தைத் திறந்து பார்த்தீர்கள். பைக் ஹெட்லைட் வெளிச்சத்திலேயே காரை சில நிமிடங்களில் சரிசெய்தீர்கள். கார் மீண்டும் இயங்கியது.

அந்தக் காட்டில் அந்த நேரத்தில் உங்களைக் கடவுள்தான் அனுப்பியிருப்பார் என நினைத்தேன். அந்தச் சூழலில் நீங்கள் செய்த வேலைக்கு எவ்வளவு பணம் கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பேன். ஆனால், நீங்கள் பணமே வாங்கவில்லை. 'பிரச்னையில் இருப்பவர்களுக்கு உதவி செய்யும்போது நான் பணம் வாங்குவதில்லை. இந்த வேலையைக் கடவுள் என் கணக்கில் வைத்திருப்பார்' என்று கூப்பிய கரங்களுடன் சொன்னீர்கள்.

அன்று நாங்கள் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வீடு வந்து சேர்ந்தோம். அந்த நேரத்தில் நீங்கள் சொன்ன வார்த்தைகள் என்னைச் சிந்திக்க வைத்தன. 'சாதாரண நிலையில் இருக்கும் ஒருவரே இப்படி ஒரு கொள்கை வைத்திருக்க முடியும் என்றால், நாமும் இதைப் பின்பற்றினால் என்ன?' என்று நினைத்தேன்.

அதுவரை ஒரு மருத்துவமனையில் வேலை பார்த்துக்கொண்டிருந்த நான், கடவுளின் கணக்கில் நம்பிக்கை வைத்து இந்த மருத்துவமனையைத் தொடங்கினேன். நியாயமான கட்டணத்தைத் தாண்டி எதையும் பெறுவதில்லை. வசதி இருப்பவர்கள் கேட்காமலே கொடுக்கிறார்கள். இல்லாதவர்களை வற்புறுத்துவதில்லை. எனக்கு எந்தக் குறையும் இல்லை. உண்மையில், நான் முன்பைவிட அதிகம் சம்பாதிக்கிறேன்.

உங்களை எங்கெங்கோ தேடிப் பார்த்தேன். கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படி ஒரு சூழலில் உங்களைச் சந்திப்பேன் என நினைக்கவில்லை. உங்கள் சொந்த விதியின்படி, நான் உங்களிடம் பணம் வாங்க முடியாது. கடவுளின் கணக்கிலிருந்து இதைச் சரிசெய்துவிட்டேன். நீங்கள் இங்கு வந்திருப்பதை வீட்டிலும் சொன்னேன்'' என்று டாக்டர் திரும்பிப் பார்க்க, உள் அறையிலிருந்து டாக்டரின் மனைவியும் பிள்ளைகளும் வந்து அந்த நோயாளி நலம்பெற வாழ்த்து சொன்னார்கள்.

நோயாளியின் கரங்கள் தானாக உயர்ந்து, டாக்டரின் அறையிலிருந்த இறைவன் படங்களை வணங்க, அவர் கண்கள் பெருக்கெடுத்தன.

நாம் செய்யும் செயல்கள் நமக்கே திரும்பி வருகின்றன. இதற்கு இன்னொரு சம்பவமும் உதாரணம்.

ரயிலில் ஒரு மூதாட்டி ஏறி மாம்பழம் விற்றுக்கொண்டிருந்தார். சுவையான இமாம்பசந்த் மாம்பழத்தின் வாசனை பெட்டியெங்கும் நிரம்பியது. நன்கு கனிந்த பழங்கள் எல்லாம் ஒரே சைஸில் இருந்தன. 'ஒரு பழம் 50 ரூபாய்' என்று பாட்டி சொல்ல, ஒருவர் பேரமே பேசாமல் 200 ரூபாய் கொடுத்து நான்கு பழங்கள் வாங்கிக்கொண்டார். பாட்டி அடுத்தடுத்த பெட்டிகளுக்குப் பழம் விற்கப் போனார்.

அரை மணி நேரம் கழித்து அந்தப் பாட்டி அதே பெட்டிக்குத் திரும்பி வந்தார். அவர் கூடையில் இருந்த அத்தனை பழங்களும் விற்றுவிட்டிருந்தன. ஒரே ஒரு பழம் மட்டும் பெரிய சைஸில் இருந்தது. 200 ரூபாய்க்கு நான்கு பழங்கள் வாங்கியவரிடம் வந்து, "ஐயா, இது உங்க பழம். வாங்கிக்கோங்க" என்றார்.



''நான்தான் ஏற்கனவே வாங்கிட்டேனே பாட்டி'' என்றார் அவர். "இல்ல, இதுக்கு நீங்க முன்னாடியே பணம் கொடுத்துட்டீங்க'' என்றார் பாட்டி. அவர் புரியாமல் விழித்தார். பாட்டி உடனே, "நீங்க பேரம் பேசாம வாங்கிட்டீங்க. அடுத்த பெட்டியில பல பேர் பேரம் பேசி 40 ரூபாய்க்கு வாங்கினாங்க. உங்களுக்கு அதிக விலைக்கு விற்கிறது தப்பு. எனக்கு மனசு கேக்காது. அதான் கணக்கைச் சரிசெய்யறதுக்கு இதைக் கொடுக்கிறேன்" என்றார்.

நமக்கானது நம்மிடம் எப்படியும் திரும்ப வந்துவிடும். ●

# பள்ளியில் கற்க வேண்டிய நன்னெறி!

பள்ளிக்காலத்தில் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த வகுப்புகளாக விளையாட்டுப் பாடவேளையும் நீதிபோதனைப் பாடவேளையும் இருக்கின்றன. விளையாட்டு நேரத்தில் வகுப்பறை இறுக்கத்திலிருந்து விடுபட்டு மைதானத்தில் ஓடியாடி விளையாடலாம் என்கிற சுதந்திரம் அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. நீதிபோதனை வகுப்பில் சொல்லித் தரப்படும் கதைகளும், அவை உணர்த்தும் நீதியும் குழந்தைகளுக்குப் பிடிக்கின்றன. அந்தப் பாடத்துக்குத் தேர்வு வைப்பதில்லை என்பதும், அது பிடித்துப் போக முக்கியமான காரணம்.

உண்மையில் நீதிபோதனை வகுப்புக்குப் பள்ளியில் தேர்வு தேவைப்படாது. ஏனெனில், ஆயுள் முழுக்க வாழ்க்கை நமக்குப் பல தேர்வுகளை வைத்துக்கொண்டே இருக்கிறது. அந்த எல்லாத் தேர்வுகளுக்குமான விடைகள், பள்ளியில் படிக்கும் நீதிபோதனைப் பாடத்தில் இருக்கிறது.

அந்த நீதிபோதனை வகுப்புகளைக் குறைத்துவிடாமல், கீழ்க்காணும் பண்புகளைக் குழந்தைகள் மனத்தில் விதைக்கலாம்...

◆ **எல்லையற்ற அன்பும் கருணையும்:** பிரதிபலனை எதிர்பார்த்துச் செலுத்தப்படும் அன்பு சுயநலமானது. எந்த நிபந்தனைகளும் இல்லாமல் செலுத்தும் அன்பே உண்மையானது. எல்லோரும் அன்பு செலுத்தும்போது, உலகம் கருணைமிக்கதாக மாறிவிடும். கொடுமைகள் அகன்றுவிடும். வெறுப்பைத் தவிர்த்து அன்பைப் பரப்பி மகிழ்ச்சியையும் வெற்றியையும் அடைவதற்குக் குழந்தைகளுக்குச் சொல்லித்தர வேண்டும்.

◆ யாரையும் ஏமாற்றாமல், எந்தத் தவறும் செய்யாமல், நேர்மையாக வாழ்வதற்குக் கற்றுத்தர வேண்டும். சின்னச்சின்ன விஷயங்களில்கூடப் பொய் பேசாமல் உண்மையாக நடப்பதன் பலன்களை உணர்த்த வேண்டும்.

◆ வெற்றிக்குக் குறுக்குவழிகள் எதுவும் இல்லை, கடின உழைப்பே வெற்றிக்கான வழி என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். தாங்கள் விரும்பும் விஷயத்துக்காகக் கடினமாக உழைப்பதற்கு அவர்களைப் பழக்கப்படுத்த வேண்டும்.

◆ அவசரமான இந்த உலகில் அடுத்தவர்களை மிதித்துத் தள்ளிவிட்டு முன்னேறுவதையே பலரும் செய்கின்றனர். அப்படி எவரையும் வீழ்த்திவிட்டு நாம் பெறுவது வெற்றியல்ல என்பதை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும். பணம், அந்தஸ்து, வாழ்க்கைமுறை, தோற்றம் என்று எதையும் பிரித்துப் பார்த்து எவரையும் அவமானப்படுத்தக்கூடாது. எல்லோரையும் மதிப்பதற்குக் குழந்தைகளைப் பழக்க வேண்டும்.

◆ தனித்தனியாக முயற்சி செய்வதைவிட, குழுவாக இணைந்து வெற்றி பெறுவதன் பலன்களைக் குழந்தைகளுக்கு உணர்த்த வேண்டும். சக மனிதர்களுடன் விட்டுக் கொடுத்தும் தட்டிக் கொடுத்தும் பெறும் வெற்றிகள் உயர்வானவை என்பதை அவர்கள் அறிய வேண்டும். அதுவே சமூகத்துடன் நன்கு பழகும் இயல்புகளைக் குழந்தைகளுக்கு உருவாக்கும்.

◆ கருத்து வேறுபாடுகளையும் சண்டைகளையும் பெரியவர்களைவிடக் குழந்தைகள் சீக்கிரமே மறந்துவிடுகிறார்கள். கோபத்தில் அடுத்தவர்கள் பேசும் வார்த்தைகளையும் அவர்கள் எளிதில் மன்னித்துவிடுகிறார்கள். இந்த விஷயத்தில் அந்தக் குழந்தை மனசை எப்போதும் பத்திரமாக வைத்திருக்க அவர்களைப் பழக்கப்படுத்த வேண்டும்.

◆ அடுத்தவர்களின் பிரச்னைகளைப் புரிந்துகொண்டு அவர்கள் வளர வேண்டும். பசி, கடன், நோய் என்று ஏராளமான பிரச்னைகளால் இங்கு மக்கள் தவிக்கிறார்கள். அவர்களின் நிலையைப் புரிந்துகொண்டு கனிவோடு எவரையும் அணுகும் பண்பு இளம்வயதிலேயே கிடைக்க வேண்டும். பள்ளிகள் அதைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால், சமூகத்துக்கு அக்கறையுடன் உதவும் ஏராளமானவர்கள் கிடைப்பார்கள். ●




RAMRAJ
LittleStars®
KIDS DHOTIS & KURTA
LET THE LITTLE ONES SHINE IN THE TRENDING TRADITION.


Steal the
Spotlight
with Style
Culture India™
TRADITIONAL KURTA DHOTI
RAMRAJ
SCAN QR CODE FOR
STORE LOCATION
Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in



Kokhila®
WOMENS INNER WEAR
By
RAMRAJ©
Shop Online @ www.ramrajcotton.in


SHIRT CRAFTED FOR ALL SEASON
EMBRACE THE BREEZY HAPPINESS THIS FESTIVE SEASON WITH WHITE AND COLOUR LINEN PARK FABRIC , SHIRTS & TROUSERS
Available in 50+ Colours as plain and printed.
LINEN PARK®
SHIRTS•TROUSERS•FABRICS
By
RAMRAJ
Available at Company Showrooms & All leading Textile Shops

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421–4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

# உதவிக்கரம் நீட்டுவதே உன்னத நாகரிகம்!



மனிதன் நெருப்பை அறிந்தபோது நாகரிகம் வளர்ந்தது... இரும்பைப் பயன்படுத்த கற்றுக்கொண்டபோது நாகரிகம் வளர்ந்தது... சக்கரத்தை உருவாக்கியபோதே மனிதர்களால் விரைந்து பயணம் செய்ய முடிந்தது, எனவே அப்போதுதான் நாகரிகம் வளர்ந்தது என்றெல்லாம் வரலாறுகள் விவரிக்கும். மனித நாகரிகத்தின் வயதைச் சில லட்சம் ஆண்டுகளுக்கு முன்பாக அவர்கள் கொண்டு செல்வார்கள்.

ஆனால், மார்கரட் மீட் என்னும் புகழ்பெற்ற மானுடவியலாளர் இதிலிருந்து வித்தியாசப்படுகிறார். ‘‘மனித நாகரிகம் உருவானது 15 ஆயிரம் வருடங்களுக்கு முன்புதான்!’’ என்கிறார் அவர்.

“மானுடவியல், ஆதிமனிதன் வாழ்க்கை, நாகரிகம் பற்றித் தெரிந்துகொள்ள அதற்கான தரவுகள், அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் நிச்சயம் தேவை. அது அறிவியல்பூர்வமாக அறிந்துகொள்வது. ஆனால், அதற்கு முன்னர் ‘மனித நாகரிகம் என்றால் என்ன’ என்று உணர்வுப்பூர்வமாக நாம் புரிந்துகொள்ள வேண்டும்’’ என்கிறார் அவர்.

அவர் ஒரு சம்பவத்தைக் காட்டி, உணர்வுப்பூர்வமாக மனித நாகரிகத்தைப் புரிந்துகொள்ளச் சொல்கிறார். ‘‘15 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு மனிதனின் எலும்புக்கூடு எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. மற்ற எலும்புக்கூடுகளுக்கும் அதற்கும் என்ன வித்தியாசம் தெரியுமா? அந்த எலும்புக்கூட்டுக்குச் சொந்தமான மனிதனின் தொடை எலும்புகள் முறிந்துபோய், சில காலத்தில் அது சரியாகி, மறுபடியும் அவர் வேட்டைக்குப் போய் இயல்பு வாழ்க்கை வாழ்ந்து கடைசியாக இறந்து போயிருக்கிறார். அதுதான் நாங்கள் கண்டுபிடித்த வித்தியாசம்’’ என்றார் அவர்.

இதைப் படிக்கும் எவருக்கும் குழப்பம் எழலாம். ‘ஒரு மனிதனின் தொடை எலும்புகள் முறிந்து போய் மறுபடியும் அது ஒன்று சேர்ந்து சரியாகி இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கும், நாகரிகத்துக்கும் என்ன தொடர்பு?’ என்ற கேள்வி எழலாம்.


மார்கரட் மீட் விவரிக்கிறார். ‘‘மனிதனும் ஒரு விலங்குதான். மற்ற விலங்குகளை எப்படிப் பசி உயிர்ப்பாக இருக்கச் செய்கிறதோ அப்படித்தான் மனிதனையும் செய்தது. மான் கூட்டத்தில் ஒற்றை மானைச் சிங்கம் கவ்வினால், மற்ற மான்கள் சிதறி ஓடும். அந்த மானைக் காப்பாற்ற வராது. வேட்டையாட ஒரு மனிதக் கூட்டம் செல்கிறது. அங்கே ஓநாய்க் கூட்டம் துரத்தினால் அவரவர் தனித்தனியாகத் தப்பிக்கப் பார்ப்பார்களே தவிர, சக மனிதனைக் காப்பாற்ற வேண்டும் என்றெல்லாம் நினைக்க மாட்டார்கள். காரணம், அப்போது மனிதன் விலங்குகளுக்கான பண்பைப் பெற்றிருந்தான். பிற மனிதரைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வெல்லாம் அங்கே இல்லாமல் இருந்தது. இப்படித்தான் மனிதன் பல லட்சம் ஆண்டுகளாக இருந்தான்.

இப்படிப்பட்ட வாழ்க்கைமுறையில், ஒரு மனிதனுக்கு தொடை எலும்பு முறிந்துபோனால் அவன் வாழ்வே போயிற்று என்றே நினைத்துக்கொள்ளலாம். அவனை அப்படியே போட்டுவிட்டு ஆதிகாலத்து மனிதர்கள் போய்விடுவார்கள். அவர்களைப் பொறுத்தவரை அது தவறான செயலும் இல்லை. இப்படியான சூழலில் ஒரு மனிதனின் தொடை எலும்புகள் முறிந்து சரியாகியிருக்கிறது என்றால், அவனை ஒருவரோ பலரோ பத்திரமாக ஒரு குகையில் மறைத்து வைத்திருக்க வேண்டும். தினமும் அவனுக்குத் தேவையான உணவை வேட்டையாடிக் கொண்டுவந்து கொடுத்திருக்க வேண்டும். அவனுக்கு எல்லாத் தினசரிக் கடமைகளிலும் உதவி செய்திருக்க வேண்டும். அவனை அன்போடு அரவணைத்து தூங்க வைத்திருக்க வேண்டும். வலியில் துடிக்கும்போது அவனுக்கு ஆறுதல் சொல்லியிருக்க வேண்டும். இதையெல்லாம் செய்திருந்தால்தான், அந்த மனிதன் மறுபடி ஆரோக்கியமாகி வேட்டையாட முடியும்.

ஒரு மனிதன் தன்னலம் பார்க்காமல் இன்னொரு மனிதனின் நலத்தில் அக்கறை கொள்ளும்போதுதான் அங்கே நாகரிகம் தோன்றுகிறது என்று எடுத்துக்கொள்ள வேண்டும். சக்கரம் கண்டுபிடித்ததோ, நெருப்பை உண்டாக்கக் கண்டுபிடித்ததோ எல்லாம் நாகரிகம் இல்லை. ஒரு மனிதனின் தொடை எலும்பு முறிந்து அவன் தவிக்கும்போது, மற்றவர்கள் கவனித்துக்கொண்டார்களே... அங்கேதான் முதல் மனித நாகரிகம் தோன்றுகிறது" என்கிறார் மார்கரட் மீட்.

பிறருக்கு உதவி செய்வதே மனித நாகரிகத்தின் ஆரம்பம். மனிதர்களாகிய நாம் அனைவரும் பிறருக்கு முடிந்த மட்டும் உதவி செய்ய வேண்டும். அதை சிறுவயதிலேயே பிள்ளைகளுக்குப் பழக்க வேண்டும். தெரிந்தவர்களுக்கு உதவி செய்வது மட்டுமில்லை, தினம் தினம் நாம் பார்க்கும் முன்பின் தெரியாதவர்களுக்கும் உதவி செய்து கடப்பதே நாகரிக மனிதனின் பண்பு. ●

# மதிப்பு மனதால் வரும்!



ஒரு முதியவரைப் பணக்கார வீட்டில் விருந்துக்கு அழைத்திருந்தார்கள். அவர் கைத்தடியை ஊன்றியபடி அந்த வீட்டிற்கு வந்தார். வீட்டுக்குள் நுழைந்தபோது, தான் ஊன்றிவந்த கைத்தடியைத் தலைகீழாகப் பிடித்தவாறு நடந்தார். இதனால் அவரால் இயல்பாக நடக்க முடியவில்லை.

விருந்துக்கு வந்திருந்த பலர் இதற்காக அவரைக் கிண்டல் செய்தனர். முதியவர் சிரித்துவிட்டு, ''வீட்டின் தரைவிரிப்பு அழகாக உள்ளது. நான் சாலையில் கைத்தடியை ஊன்றி வரும்போது கீழ்ப் பகுதியில் படிந்த அழுக்குகள் இந்தத் தரைவிரிப்பை அழுக்காக்கி விடக்கூடாது என்பதற்காகவே ஊன்றுகோலைத் திருப்பிப் பிடித்தேன்'' என்றார். இதைக் கேட்ட அனைவரும் வெட்கத்தால் தலைகுனிந்தனர்.

இந்த முதியவரைப் போல வாழ்வில் மதிப்பு பெறுவதற்கு எப்போதும் பின்பற்ற வேண்டிய விஷயங்கள்:

- கூட்டமாக எல்லோரும் பின்பற்றும் எதையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றாதீர்கள். பெரிய கூட்டங்கள் எப்போதும் கேள்வி கேட்காமல் யார் யாரையோ பின்பற்றும்.
- அதிகம் பேர் போகாத பாதையில் பயணிப்பது சிறப்பு. ஆனால், 'ஏன் மற்றவர்கள் இந்தப் பாதையைத் தவிர்க்கிறார்கள்' என்பதை உணர்ந்துகொண்டு பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.
- வாழ்க்கை என்பது நிறைய தையல்களும் கிழிசல்களும் கொண்ட ஒரு போர்வை போன்றது. அதைக் கவனமாகப் பயன்படுத்துங்கள்.
- யாரையும் விமர்சனம் செய்வதற்கு முன்பு சிந்தியுங்கள். ஒருவரைப் பற்றிக் கருத்துச் சொல்வதற்கு முன்பு கவனியுங்கள். நீங்கள் எதைச் செய்தாலும், அது பல மடங்காக உங்களுக்குத் திரும்ப வரும்.
- நீங்கள் வாழ்வில் கடந்து செல்லும் எல்லோருக்குமே உங்கள் வாழ்வில் இடம் உண்டு என்பதைப் பாடமாகக் கற்றுக்கொள்ளுங்கள்.
- உங்களின் இன்றைய முடிவுகளுக்கு எதிர்காலத்தில் கொடுக்கப்போகும் விலை என்ன என்பதே நீங்கள் போட வேண்டிய முக்கியமான கணக்கு.

அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் இளைஞர் புதிதாக ஒரு ஐபோன் வாங்கி இருந்தார். 70 ஆயிரம் ரூபாய் போன். பிரச்னை என்னவென்றால், அவர் தன் டேபிளிலேயே போனை வைத்துவிட்டு அலுவலகம் முழுவதும் போய் எல்லோரிடமும் பேசுவார். சில சமயங்களில் போன் பேசிக்கொண்டே பிறர் இடத்துக்குப் போய் உட்காருவார். அதன்பின் அங்கேயே டேபிளில் போனை விட்டு விடுவார்.

“ஏங்க, போனை எடுத்துட்டுப் போங்க” என்று அந்த டேபிள்காரர் சொன்னால், ‘‘போன் எங்கே போயிடப் போகுது. ஆபீஸ்ல யார் இதை எடுக்கப் போறாங்க?’’ என்பார். மேனேஜர் அவருக்கு அறிவுரை சொன்னார். “இது காணாம போச்சுன்னா, நீங்க தேடுற வேகத்துல எல்லார் மேலயும் சந்தேகப்படுவீங்க. போனைத் தொலைச்ச உங்க பிரச்னை மட்டுமில்ல அது, எல்லோருடைய பிரச்னையாவும் மாறும்” என்று எச்சரித்தார். அந்த இளைஞர் மேனேஜரைப் பார்த்து ‘நீங்க ஓவரா கற்பனை செய்கிறீர்கள்’ என்று சொல்லி, ஒரு நக்கல் சிரிப்பு சிரித்து விட்டுச் சென்றார்.

சில வாரங்கள் கழித்து அந்த இளைஞரின் போன் காணாமல் போய்விட்டது. பதற்றத்துடன், “பாத்தீங்களா... பாத்தீங்களா...’’ என்று அனைவரிடமும் கேட்டுக் கொண்டிருந்தார். எல்லோரையும் அவர் சந்தேகப்பட, அலுவலகத்தில் மற்றவர்கள் சங்கடமாக உணர்ந்தார்கள். கடைசியில் பார்த்தால், அவர் போனை வீட்டிலேயே மறந்து வைத்துவிட்டு வந்திருந்தார்.




மேனேஜர் இப்போதும் அறிவுரை சொன்னார், “சில பொருள்களைப் பொருளோட உரிமையாளர் பத்திரமா பாதுகாக்குறது அவங்களுக்கு மட்டும் நல்லதில்ல, மத்தவங்களுக்கும் நல்லது.”

லீலா கிருஷ்ணன் எழுதிய சிறுகதை ‘மெல்ல மாடிப்படி ஏறி’. இதேபோன்ற சம்பவம் அதில் நடக்கும். சுசீலா என்னும் 30 வயதுப் பெண் தன் ஐந்து வயதுக் குழந்தையோடு பம்பாயிலிருந்து சென்னை வருகிறாள். சென்னையில் அவள் சித்தப்பா பெண்ணின் திருமணம். சுசீலாவின் மகள் பப்பி சுட்டியாக இருக்கிறாள். பலர் அக்குழந்தையைப் பாராட்டுகிறார்கள்.

திருமணம் வீட்டிலேயே சிறப்பாக முடிகிறது. வீட்டில் நிறைய விருந்தினர்கள் என்பதால், அன்றிரவு குழந்தைகளை வரிசையாக மொட்டைமாடியில் நல்ல பாயையும் பெட்ஷீட்டையும் விரித்துத் தூங்க வைக்கிறார்கள். பெண்கள் வீட்டுக்குள் படுக்க, ஆண்கள் வசதிப்பட்ட வீடுகளின் திண்ணைகளில் அடைந்து கொள்கிறார்கள்.

நள்ளிரவில் சுசீலாவுக்குத் திடீரென்று பயம் வருகிறது. ‘என் குழந்தை பப்பி மேலே படுத்திருக்குமே. அவள் கழுத்தில் மூன்று சவரன் செயின் இருக்கிறதே. ஒருவேளை மொட்டைமாடியில் குழந்தைகளுக்குத் துணையாக படுத்திருக்கும் வயதான வேலைக்காரர் மாரிச்சாமி அதைத் திருடிவிட்டால்?’

உடனே மாடிக்குப் போய் மகளைச் சோதிக்க நினைத்து எழுந்திரிக்கிறாள். அவளின் முதிய அத்தை, “என்னடிம்மா பிரச்னை” என்று கேட்க, சுசீலா சொல்கிறாள். “அப்படியெல்லாம் நடக்காது, மாரிச்சாமி நல்லவன்” என்று சமாதானப்படுத்துகிறார். ஆனால், சுசீலாவுக்கு நிம்மதி இல்லை.

இதனால், “நானே போய்ப் பார்த்து வருகிறேன்” என்று அத்தை மாடிப்படியில் தட்டுத் தடுமாறி ஏறி எப்படியோ பப்பியைக் கண்டுபிடித்து அவள் கழுத்தைத் தொட்டுப் பார்க்கிறார். செயின் அங்கே இல்லை. “ஐயோ, செயினைக் காணோமே” என்று அத்தை பதற, “யாருங்க அது?” என்று வேலையாள் மாரிச்சாமி லைட்டைப் போட, அத்தையும் மாரிசாமியும் பார்த்துக்கொள்கிறார்கள்.

மாரிச்சாமியிடம் “செயின் எங்கே?” என்று அத்தை கேட்க, “நீங்கதானே குழந்தை கழுத்தைத் தொட்டீங்க. நீங்க சொல்லுங்க, செயின் எங்கே?’’ என்று அவர் பதிலுக்குக் கேட்கிறார். இருவருக்கும் சண்டை வருகிறது.

படபடவென்று அனைவரும் கூடுகிறார்கள்.

மாரிச்சாமியை சோதனை போடுகிறார்கள். அவரிடம் நகை இல்லை. சுசீலாவை அவள் அம்மா தனியே அழைத்துப் போகிறார். "சுசி, உங்க அத்தை ரொம்ப கஷ்டத்துல இருக்கா. அவளோட மகள் வாழாம வந்துட்டா. மருமகன் வேற மூணு சவரன் செயின் போட்டாத்தான் மகளை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போவேன்னு சொல்லிட்டான். அதனால உன் அத்தை கூட எடுத்திருக்கலாம். அவளை எதுவும் கேட்டா அது குடும்பத்துக்கு அசிங்கம். இதை விட்டுவிடு" என்கிறார்.



உடனே சுசீலா சபைக்கு வந்து, "இந்தப் பிரச்னையை விட்ரலாம். நகை போனா போகுது'' என்று சொல்ல, அத்தை பரிதாபமாக ''நான் எடுக்கலடி. நீ என்னையா சந்தேகப்படுற'' என்கிறார்.

காலை எழுந்த பிறகு சுசி தன் மகள் பப்பியை அழைத்து மெதுவாக நகை பற்றி கேட்கிறாள். "அம்மா, நான் கழட்டி உங்க நகைப்பெட்டில வச்சி சூட்கேஸ்ல வச்சிருக்கேன். நைட்டு நகை போட்டுட்டு தூங்கலாமா" என்று சாதாரணமாகச் சொல்கிறாள். மாரிச்சாமியையும் அத்தையையும் தவறாக நினைத்துவிட்டோமே என்று சுசீலா வருந்துகிறாள்.

'பத்து வருடங்களாக இங்கே வேலை செய்கிறோம், நம்மைச் சந்தேகப்படுகிறார்களே' என்று மாரிச்சாமிக்கு வேதனை. 'அப்பாவின் கூடப்பிறந்த பிறப்பு. என்னைச் சந்தேகப்படுகிறாளே' என்று அத்தைக்கு வருத்தம். 'அப்பாவின் கூடப் பிறந்த பிறப்பு. பேத்தி நகையைத் திருடி இருப்பாரோ' என்று சுசிக்கு வேதனை. மதிப்புமிக்க பொருளைக் கவனமாகப் பார்க்காத காரணத்தால் எத்தனை பேருக்கு மனவேதனை. விலையுயர்ந்த பொருட்களை எங்காவது வைத்துவிட்டு, நெருங்கிய மனிதர்களையே கஷ்டப்படுத்தாதீர்கள். ●

# பணிந்திருங்கள்!



- மரங்கள்கூடக் கனிகளால் நிரம்பியிருக்கும்போது தலைசாய்ந்திருக்கிறது. எவ்வளவு சம்பாதித்தாலும் பணிவாக இருங்கள்.
- அழகு என்பது தோற்றத்தில் இல்லை. நம் நடத்தையிலும் செயல்களிலும் நம் இதயத்தில் வெளிப்படும் ஈரத்திலும் இருக்கிறது.
- கடந்த காலம் போலவே எதிர்காலம் நிச்சயம் இருக்காது. நம் செயல்களே நம் எதிர்காலத்தை நல்லதாகவோ, கெட்டதாகவோ மாற்றும்.
- 'இது நம்மால் முடியாது' என்று சில செயல்களை நினைக்கிறோம். நமக்கு அந்தச் செயல் விருப்பமில்லாதபோதுதான் அப்படி நினைப்பு தோன்றுகிறது. நாம் விரும்பினால், அது நம்மால் முடியும்.
- சில விஷயங்களை நினைத்துப் பயப்படுவதாலேயே நாம் கோழை அல்ல. எல்லோரும் ஏதோ ஒரு விஷயத்தை நினைத்துப் பயப்படுவது வழக்கம்தான். பயம் அவமானம் இல்லை.
- வாழ்வில் சிலரை இழந்ததற்காக வருந்தாதீர்கள். அவர்களைவிடச் சிறந்தவர்கள், நீங்கள் முயன்றால் கிடைப்பார்கள்.
- வாய்ப்பு வரும்போது தவற விடாதீர்கள். சில நேரங்களில் இரண்டாவது வாய்ப்பு கிடைக்காமலே போகலாம்.
- கருணையும் நன்றியுணர்வும் பல துன்பங்களிலிருந்து உங்களைக் காக்கும். எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் நன்றியுடன் இருங்கள்.

## தமிழகத்தில் தொழில் முதலீட்டுக்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனம் ரூ.1,000 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்!

சென்னை வர்த்தக மையத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. தமிழக முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் இதற்குத் தலைமை தாங்கினார். இதில் ராம்ராஜ் காட்டன் நிறுவனம் சார்பில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் பங்கேற்றார். அடுத்த ஐந்து ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய்க்கான தொழில் முதலீடு செய்வதற்கு இந்த மாநாட்டில் ஒப்பந்தம் கையெழுத்தானது. ராம்ராஜ் காட்டன் நிறுவ இருக்கும் நூற்பு நெசவு பதப்படுத்துதல்

## திருக்குறள் திரைப்பட விழாவில் ராம்ராஜ் காட்டன் புதுமைத் திட்டம்!

சென்னையில் நடைபெற்ற ‘திருக்குறள்’ திரைப்பட விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனம் சார்பில் புதுமையான திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

‘காமராஜ்’ படத்தைத் தயாரித்த ரமணா கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம் ‘திருக்குறள்’ என்ற புதிய திரைப்படத்தைத் தயாரிக்கிறது. இந்தப் படத்தின் முதல் தோற்ற வெளியீட்டு நிகழ்ச்சி, பொங்கலை ஒட்டி ஜனவரி 16–ம் தேதி சென்னையில் உள்ள மியூசிக் அகாடமியில் நடைபெற்றது. வி.ஜி.பி குழுமத் தலைவரும், தொழிலதிபருமான திரு.வி.ஜி.சந்தோஷம் முன்னிலையில் நடைபெற்ற இந்த விழாவில் த.மா.கா தலைவர் திரு. ஜி.கே.வாசன் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றார்கள். இதில் வி.ஐ.டி பல்கலைக்கழக வேந்தரும், தமிழியக்கம் தலைவருமான திரு.ஜி.விஸ்வநாதன் ‘திருக்குறள்’ படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து ஆடல், பாடல் இசை நிகழ்ச்சிகள் அரங்கேறின. அரசியல், கலை, இலக்கியம், வர்த்தகம் உள்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறப்பு விருந்தினர்கள் ஏராளமாகப் பங்கேற்றார்கள்.

தமிழர்களின் பண்பாட்டை உலகுக்குப் பறைசாற்றும் நோக்கில் உருவாகிறது ‘திருக்குறள்’ திரைப்படம். எனவே, இந்த நிகழ்ச்சியின் விளம்பரதாரராகப் பங்கேற்ற ராம்ராஜ் காட்டன் நிறுவனம், தமிழரின் பாரம்பரிய உடையான வேட்டியைப் பெருமைப்படுத்தும் புதுமைத் திட்டத்தை அறிவித்தது. இந்த விழாவுக்கான இலவச நுழைவுச் சீட்டுகள் சென்னையில் குறிப்பிட்ட சில ராம்ராஜ் காட்டன் ஷோரூம்களில் வழங்கப்பட்டன.

தொடக்க விழாவில் தமிழரின் பாரம்பரிய உடையான வேட்டியை அணிந்து வருவோருக்கு ராம்ராஜ் வேட்டி வெகுமதியாக வழங்கப்பட்டது. மாற்று ஆடை அணிந்து வருவோர் வேட்டி அணிய விரும்பியபோது, அரங்கிலேயே ஒரு வேட்டி வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கான அறிவிப்பு அரங்க வளாகத்திலேயே வைக்கப்பட்டதால், நிறைய பேர் ஆர்வமாக வேட்டியைப் பெற்றுக்கொண்டனர். இதனால் விழா அரங்கமே பாரம்பரிய வேட்டியை அணிந்தவர்களால் நிறைந்து காணப்பட்டது.



ஆலை மூலம் 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் நிகழ்ச்சியில் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலினிடம் வழங்கினார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்துச் செய்தியாளர்களிடம் திரு. கே.ஆர்.நாகராஜன் உரையாடினார். ‘‘நெசவாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கான முதலீடு இது. தமிழக அரசுடன் இணைந்து ராம்ராஜ் காட்டன் செயல்படுத்த உள்ள தொழில் முதலீடுகள் மூலமாக, மேலும் பல்லாயிரக்கணக்கான நெசவாளர்களுக்கு முழுமையான வேலைவாய்ப்பு அமையும். அதோடு தொழில் முன்னேற்றத்தில் தமிழகத்தை வளர்ச்சிப்பாதையில் அழைத்துச் செல்ல இது பேருதவியாக இது இருக்கும்’’ என்றார்.




## வெண்மை கண்டேன்!

*ராமராஜ் காட்டன் கலாசார அரங்கம் நேற்று வந்தேன்!*
*வெண்மையின் சொர்க்கத்தை அங்குநான் கண்டு கொண்டேன்!*
*வெண்நிலவில் விண்மீன்கள் வெளிச்சத்தில் வெண்மை கண்டேன்!*
*மண்ணுலகில் பசும்பாலில், பருத்தியிலே வெண்மை கண்டேன்!*

*பொங்கு கடல் முத்தினிலே, வள்ளலார் ஆடையிலே வெண்மை கண்டேன்*
*பொங்கி வரும் காவேரி புது வெள்ளம் நுரைப்பூவில் வெண்மை கண்டேன்!*
*உலகத்தமிழர்களின் மனமகிழ் தைத்திரு முதல் நாளில்*
*புதுப்பானை வழிக்கின்ற பச்சரிசி பாற்குழம்பில் வெண்மை கண்டேன்!*

*மேலாடை, இடையாடை, உள்ளாடை இன்னபிற*
*ராமராஜ் ஆடையெல்லாம் பருத்தியிழை பாங்கு கண்டேன்!*
*விவசாயி, தொழிலாளி, மேன்மை மிகு உழைப்பிறகு*
*நன்றி சொல்லும் ராமராஜ் அரங்கமெல்லாம் வெண்மை கண்டேன்!*

*ஆயிரம் ஆடையகம் அணிவகுத்து நின்றாலும்*
*மாயூரம் ராமராஜ் ஆடையகத்திற் கீடாகுமோ!*
*வாழ்த்துகிறேன்! திருப்புகழ் போல தனிப்புகழ் காண்க!*

**– செல்லன் பரமசிவம், சீர்காழி.**

[மயிலாடுதுறை ராம்ராஜ் காட்டன் ஷோரூமுக்கு வந்த வாடிக்கையாள அன்பர் வாழ்த்தி அனுப்பிய கவிதை]



# குழந்தைகளுக்கு ஊட்டுங்கள் நன்னெறி!

இன்றைய குழந்தைகள் பெரியவர்களைவிட அதிகமாகத் தொழில்நுட்பங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அது அவர்களின் கற்பனைகளிலும் வெளிப்படுகிறது. ஒரு குழந்தையிடம் பாட்டி நீதிக்கதை சொன்னார். தாகத்தில் தவித்த காகம், தண்ணீர் ஜாடிக்குள் கற்களைப் போட்டுத் தண்ணீரை மேலே வரவழைத்துக் குடித்த கதை. குழந்தை அந்தக் கதையை இப்படி மாற்றியது. 'ஜாடிக்குள்ள தண்ணீர் அடியில இருந்துச்சாம். அதைக் குடிக்க முடியாதுன்னு தெரிஞ்சது. காக்கா உடனே கூகுள் மேப்ல பார்த்துச்சு, பக்கத்துலயே ஒரு குளம் இருக்குன்னு மேப்ல காட்டுச்சு. காக்கா அந்தக் குளத்துக்குப் போய் தண்ணீர் குடிச்சுது.' இந்தக் கற்பனையை எதிர்பார்க்காத பாட்டி வியந்து போனார்.

இன்னொரு நீதிக்கதை. திராட்சைத் தோட்டத்துக்குப் போன நரி, ஆசையுடன் திராட்சைப் பழங்களைச் சாப்பிட முயன்றது. பழங்கள் உயரத்தில் இருந்ததால் எட்டவில்லை. எகிறிப் பறிக்க முயன்று தோற்ற நரி, 'சீச்சீ... இந்தப் பழம் புளிக்கும்' என்று சொல்லிவிட்டு நகர்ந்தது. இந்தக் கதையைக் கேட்ட ஒரு குழந்தை, 'திராட்சையைப் பறிக்க முடியாம போயிட்டதால, உடனே நரி போனை எடுத்தது. உணவு டெலிவரி ஆப் மூலமா ஒரு கிலோ திராட்சை ஆர்டர் பண்ணுச்சு. கால் மணி நேரத்துல டெலிவரி நபர் வந்து திராட்சையைக் கொடுத்தார். சந்தோஷமா அது இனிப்புத் திராட்சையைச் சாப்பிட்டுச்சு' என்று மாற்றியது.

**குழந்தைகளுக்கு நன்னெறிகளைப் பழக்கினால், அவர்களின் கற்பனைகளும் நன்னெறி சார்ந்ததாக இருக்கும். என்னென்ன நன்னெறிகள் அவர்களுக்கு வேண்டும்?**

- குழந்தையின் வளர்ச்சியில் குடும்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது. என்ன பிரச்னைகள் வந்தாலும் விட்டுக் கொடுக்காமல் குடும்பத்தில் ஒருவர் மீது இன்னொருவர் செலுத்தும் அன்பும் பாசமும் அவர்கள் அறிய வேண்டும். அதே உணர்வு அவர்களுக்கும் உருவாக வேண்டும்.
- பெரியோர்கள், நண்பர்கள், வீட்டில் வேலை செய்பவர்கள், தங்களுடன் விளையாடும் சக குழந்தைகள் என்று எல்லோரையும் மரியாதையுடன் நடத்த வேண்டும். பெற்றோரையும் மற்றோரையும் பார்த்தே குழந்தைகள் மரியாதை செலுத்தக் கற்றுக்கொள்கின்றன. சரியான முன்மாதிரிகளை அவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும்.
- சவால்களும் பிரச்னைகளும் ஏற்படும்போது விட்டுக் கொடுத்துப் போக வேண்டும். உறவுகளிலும் நட்பு வட்டத்திலும் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். ஆனால், ஒரேயடியாக விட்டுக் கொடுத்தாலும், சுயமரியாதையை இழக்க நேரிடும். இந்த வித்தியாசத்தை உணர்த்தி, குழந்தைகளுக்குச் சமூகத்தில் பழகுவதற்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

● உதவி தேவைப்படும் எவருக்கும் உதவிக்கரம் நீட்டுவதற்குப் பழக்க வேண்டும். இப்படிப்பட்ட கனிவு உள்ளத்துடன் வளரும் குழந்தைகள், சமூகத்தில் மதிக்கப்படுகிறார்கள்.

● உலகின் எந்த மூலைக்கும் எவரும் செல்லும் காலம் இது. உணவு, உடைகள், பழக்கங்கள், வழிபாட்டு முறைகள், பேச்சு என்று எல்லாவற்றிலும் ஒவ்வொருவரும் வித்தியாசப்படுகிறார்கள். இந்த வித்தியாசங்களை மதிக்கவும், அவற்றைத் தாண்டி அவர்களைச் சமமாக நடத்தவும் குழந்தைகள் பழக வேண்டும்.

● ஒரு பிரச்னை வரும்போது, நம் குழந்தை தப்பு செய்திருந்தாலும் அதை ஆதரித்தால், அந்தக் குழந்தைக்கு நீதிநெறி தெரியாமல் போய்விடும். 'நீ செய்தது தவறு' என்று குழந்தையிடம் சொல்லி, நீதிநெறியை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். நியாயத்தின் பக்கம் நிற்க, அவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

● யார் மீதும் கோபம் வரலாம், யாருடனும் முரண்பாடு ஏற்படலாம், சின்னச்சின்ன சண்டைகள் தோன்றலாம். அவை எல்லாமே தற்காலிகமானவை. எனவே, எந்தச் சூழலிலும் யாரையும் காயப்படுத்தக்கூடாது என்று சொல்லிக் கொடுங்கள்.

● உணவு, புத்தகங்கள், விளையாட்டுப் பொம்மைகள் என எல்லாவற்றையும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் பழக்கத்தை ஊக்குவியுங்கள். சக மனிதர்களுடன் பிணைப்பு கொண்ட ஜீவனாக அவர்கள் வளர்வார்கள்.

● அடுத்தவர்களுக்குச் சொந்தமான எதையும் அடையும் பேராசை கூடாது என்பதைச் சின்னவயதிலேயே அவர்களுக்குப் புரியவையுங்கள். ஒரு பென்சிலோ, சின்ன விளையாட்டுப் பொம்மையோ, தங்களிடம் இல்லாத ஒன்று இன்னொரு குழந்தையிடம் இருக்கும்போது குழந்தைகளுக்குப் பதற்றம் ஏற்படும். அது தனக்கும் வேண்டும் என்று தோன்றும். 'இந்த ஆசைக்கு எல்லையே இல்லை. இது பொறாமை, தாழ்வு மனப்பான்மை என நிறைய எதிர்மறை உணர்வுகளை ஏற்படுத்திவிடும்' என்று அவர்களுக்கு உணர்த்துங்கள்.

● அடுத்தவர்கள் எதையாவது சாதிக்கும்போது, அவர்களை மனம் திறந்து பாராட்டும் குணம், குழந்தைகளுக்கு இயல்பிலேயே உருவாக வேண்டும். எல்லா எதிர்மறைக் குணங்களையும் அழிக்கும் நற்பண்பு இது. அடுத்தவர்களைப் பாராட்டும் குழந்தையே, அடுத்தவர்களிடம் நிறைய பாராட்டுகளைப் பெறும். அதுவே அவர்களுக்கு நிறைவு கொடுக்கும். அந்த உணர்வு எதையும் சாதிக்க வைக்கும். இந்தத் தொடர் சங்கிலியைக் குழந்தைகளுக்குப் புரியவையுங்கள்.


● எல்லாவற்றுக்கும் பயப்படும் குழந்தை, தன்னம்பிக்கை மற்றும் சுய அடையாளத்தை இழக்கிறது. கடினமான சூழல்களில் தடுமாறிப் போகிறது. எப்படிப்பட்ட தருணத்தையும் துணிச்சலுடன் எதிர்கொள்ள அவர்களைப் பழக்குங்கள். அவர்கள் துணிச்சலாக எதையேனும் செய்யும்போது பாராட்டுங்கள். வீரம் வளரும்.


● ஒரு குழந்தை தன்னைப் பற்றி உயர்வாக நினைக்கும். ஆனால், மற்றவர்கள் எதையோ சொல்லி விமர்சனம் செய்யக்கூடும். அந்த விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை அவர்களுக்குள் உருவாக்குங்கள். 'நம் கருத்துக்கு மாறான கருத்துகள் பலரிடம் இருக்கக்கூடும்' என்பதைக் குழந்தைகள் உணர வேண்டும். சமூகத்தில் நிலவும் வித்தியாசங்களை அப்போதுதான் அவர்கள் அறிவார்கள்.

● பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் குழந்தைப் பருவத்திலேயே ஏற்பட வேண்டும். சின்னச் சின்ன வேலைகளை அவர்கள் பொறுப்பில் விடுங்கள். அவற்றைச் சரியாகச் செய்யும்போது அவர்களைப் பாராட்டுங்கள். பள்ளியிலும் சமூகத்திலும் பொறுப்புகளை ஏற்பதற்கு அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

● கோபம், அழுகை, எரிச்சல் போன்ற உணர்வுகளை உடனே உடனே வெளிப்படுத்தாமல் இருப்பதற்குத் தேவைப்படும் சுயக்கட்டுப்பாட்டைக் குழந்தைகள் பெற வேண்டும். எப்படிப்பட்ட சூழலிலும் உணர்ச்சிகளுக்கு அடிமை ஆகாமல் இருப்பதற்கு அவர்களைப் பழக்குங்கள். அப்போதுதான் அலட்சியமாக எதையும் செய்யாமல், பொறுப்பாக நடந்துகொள்வார்கள்.

● சோர்ந்து போகாமல், தளர்ந்து முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து ஒரு செயலைச் செய்வதற்குப் பழக்குங்கள். வாழ்க்கை முழுக்க இந்த விடாமுயற்சியே அவர்களை உயரவைக்கும். ●





# நாம் கற்கவேண்டிய நன்னெறிகள்!

மீன் குஞ்சு பிறக்கும்போதே நீச்சல் கற்றுக்கொள்வது போல நாமும் பிறக்கும்போதே பல நன்னெறிகளைப் பெற்றிருக்கிறோம். குடும்பத்திலும் சமூகத்திலும் அனுபவங்களால் மீதியைக் கற்றுக்கொள்கிறோம். அதன் அடிப்படையில்தான் வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறோம்.

பொது இடங்களை அசுத்தமாக்கும் மனிதர்களைப் பார்த்து, "இதுவே உங்கள் வீடாக இருந்தால் இப்படிச் செய்வீர்களா?'' என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. வீட்டைப் போலவே பொது இடங்களையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நன்னெறி நமக்குள் இருப்பதே காரணம்.

அலறல் சத்தம் எழுப்பியபடி விரைந்துவரும் ஆம்புலன்ஸுக்குப் போக்குவரத்து நெரிசலில் ஒதுங்கி வழிவிடாமல் சிலர் வாகனங்களை ஓட்டுவதுண்டு. அவர்களைப் பார்க்கும்போது, 'இதுவே அவர்களின் உறவினர் யாராவது அந்த ஆம்புலன்ஸில் இருந்தால் அவர்கள் இப்படிச் செய்வார்களா?' என்ற கேள்வி எழுவதுண்டு. ஆம்புலன்ஸ் சத்தம் கேட்டதுமே ஒதுங்கி வழிவிட்டு, அதில் செல்லும் நோயாளி நலம் பெறுவதற்காகப் பிரார்த்தனை செய்துகொள்ளும் நன்னெறி நம்மிடம் இருக்கிறது.

கூட்டமான பேருந்தில் ஒரு கர்ப்பிணி புதிதாக ஏறி, உட்கார இடமில்லாமல் தவிக்கும்போது, அருகே உட்கார்ந்திருக்கும் பலர் அதைக் கவனிக்காதது போலக் கண்மூடித் தூங்குவதாக நடிப்பார்கள். 'அவர்கள் குடும்பத்துப்பெண்ணாகஇருந்தால்இப்படிச்செய்வார்களா' என்ற கேள்வி பலருக்கு எழும். கர்ப்பிணியோ, மாற்றுத் திறனாளிகளோ தவித்தால், அவர்களுக்கு உடனடியாக உதவிகள் செய்வது நம் சமூகம் கற்றுத் தந்திருக்கும் நன்னெறி.

இப்படிப் பல சூழல்களை, பல உதாரணங்களைச் சொல்லலாம். நன்னெறிகள் இல்லாத ஒரு சமூகம் ஆபத்தானது. எல்லோரும் சுயநலமாகவும், தாங்கள் விரும்பியதை அடைவதற்காக எதை வேண்டுமானாலும் செய்பவர்களாகவும் இருந்தால் அங்கு மனிதம் தழைக்காது. சட்டங்கள் மூலமும் சமூக ஒழுங்குகள் மூலமும் அறமான வாழ்க்கையை உறுதி செய்யும் இடங்களே அமைதிப் பிரதேசங்களாகத் திகழும். அப்படி ஓர் அமைதிப்பூங்காவான இந்தியாவில் நாம் வாழ்கிறோம் என்பது பெருமைக்குரிய விஷயம்.

ஒவ்வொரு நாட்டிலும் சில விதிமுறைகளும் சட்டங்களும் மாறுபடும். சில பகுதிகளில் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட சில செயல்கள், வேறொரு நாட்டில்

சட்டவிரோதமாகக் கருதப்படும். எனினும், எல்லாத் தேசங்களிலும் மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகள் சில உண்டு. அவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

- முன்முடிவுகளோ, விருப்பு வெறுப்புகளோ இல்லாமல் திறந்த மனசுடன் எதையும், எவரையும் அணுக வேண்டும். அப்போதுதான் மனிதர்களையும், அவர்கள் சொல்லும் கருத்துகளையும் புரிந்துகொள்ள முடியும். எதற்கும் உள்நோக்கம் கற்பிக்காமல் இருக்க முடியும். அடுத்தவர்களிடம் அன்பு காட்ட முடியும். அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள முடியும்.
- நாம் தவறு செய்தால் ஒப்புக்கொள்கிற நேர்மை இருக்க வேண்டும். அப்போதுதான் அடுத்த முறை சரியாகச் செய்து ஜெயிக்க முடியும். அதேபோலப் பணம், அந்தஸ்து, பின்னணி என்று எதையும் வைத்து எவரையும் பிரித்துப் பார்க்காமல், எல்லோரையும் சரிசமமாக கண்ணியத்துடன் நடத்துகிற நேர்மையும் இருக்க வேண்டும்.
- குடும்பத்தினருக்கு, நண்பர்களுக்கு, உறவுகளுக்கு, பணிபுரியும் அலுவலகத்துக்கு, நல்வாய்ப்புகள் கொடுக்கிற தேசத்துக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும். இந்த விசுவாசமே மனிதர்களை நல்லுணர்வுடன் அணுக வைக்கும். எந்தப் பொருளையும் சரியாகப் பயன்படுத்துகிற அக்கறையை மனத்தில் விதைக்கும்.
- சக மனிதர்களையும், அவர்களின் நம்பிக்கைகளையும் மதிக்க வேண்டும். பொது இடங்களையும் நம் சொத்துகள் போலவே மதிக்கின்ற உணர்வு வேண்டும். எவரையும் காயப்படுத்தக்கூடாது, நம் சூழலில் உள்ள எந்த இடத்துக்கும் பாதகம் ஏற்படுத்தக்கூடாது.
- எந்த வேலையைச் செய்தாலும், அதில் முழுமையான உழைப்பைக் கொடுத்துச் சிறப்பாகச் செய்ய வேண்டும். 'இவர் இந்தப் பணியைக் குறித்த நேரத்திலும் சிறப்பாகவும் பொறுப்பாகவும் செய்து முடிப்பார்' என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எவ்வளவு நெருக்கடியான சூழலிலும், எப்படிப்பட்ட பின்னடைவுகள் ஏற்பட்டாலும், தொடர்முயற்சியுடன் உழைக்க வேண்டும்.
- எப்படிப்பட்ட நேரத்திலும் விதிகளை மதிக்கிற பொறுப்புணர்வு இருக்க வேண்டும். வாகனங்களே வராத நள்ளிரவு நேரத்திலும் சிக்னலில் சிவப்பு விளக்கை மதித்து நின்று செல்கிற அக்கறையே அந்தப் பொறுப்புணர்வு.
- அடுத்தவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு உதவிகள் செய்கிற உள்ளம் வேண்டும். தவறு செய்துவிட்டு வருந்துகிற எவரையும் மன்னிக்கிற பெருந்தன்மை பெற வேண்டும். தனக்கு உதவிகள் செய்கிற எவரையும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிற ஈர நெஞ்சம் இருக்க வேண்டும். கால் சென்டர் ஊழியர்கள் பேசுவது போன்ற கனிவுடன் எவரிடமும் பேச வேண்டும்.
- எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் எவரையும் எடுத்தெறிந்து பேசாத பணிவு வேண்டும். அடுத்தவர்களுக்கு உதவி செய்வதற்காக எந்த நிலைக்கும் இறங்கிப் போகிற அடக்க உணர்வு வர வேண்டும். எதற்காகவும் எரிச்சல் அடையாத பொறுமையான குணமும் வசப்பட வேண்டும்.
- நம்மையும், நாம் இருக்கும் இடத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். நாம் இருக்கும் சூழலின் தூய்மை கெடும்விதமாக எதையும் செய்துவிடக் கூடாது. இந்தத் தூய்மை நம் மனத்திலும் நிலவ வேண்டும்.
- சமூகமாக இணைந்து உழைக்கப் பழக்கப்பட்டவர்கள் நாம். எந்தக் குழுவிலும் நம்மைத் தயங்காமல் இணைத்துக்கொண்டு இரண்டறக் கலந்துவிடும் பண்பு பெற வேண்டும். அது நம்மை எந்த உயரத்துக்கும் இட்டுச் செல்லும் ●

RAMRAJ காட்டன்


# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 8 இதழ் 8

பிப்ரவரி 2024

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com


இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# இரண்டு வழிகாட்டிகள்!

ஒரு கல்லூரியில் புகழ்பெற்ற பேராசிரியர் ஒருவர் இருந்தார். தத்துவம், வரலாறு, அரசியல் என்று பல பிரிவுகளில் நிறைய நூல்களை எழுதியவர். சிறந்த அறிஞர் என்று எல்லோரும் அவரைப் பாராட்டுவார்கள். தான் மிகப்பெரிய அறிவுஜீவி என்ற கர்வத்தில் இருக்கும் அவர், தன் வகுப்பில் மாணவர்களை மிக மோசமாக அவமானப்படுத்துவார். மாணவர்களைச் சம்பந்தமில்லாத ஏதேதோ கேள்விகள் கேட்பார். பதில் தெரியாமல் அவர்கள் தவிக்கும்போது, ‘‘உனக்கு அறிவு இருக்கா? நான் எவ்வளவு பெரிய அறிவுஜீவி தெரியுமா? உங்களை மாதிரி முட்டாள்களுக்குப் பாடம் எடுக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகிட்டேன்” என்று தன்னையே நொந்துகொள்வார்.

ஒருநாள் அவர் இப்படித் தன் அறிவைப் பற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கும்போது ஒரு மாணவி எழுந்து, “ஒருவர் அறிவை எப்படிப் பெறுகிறார் சார்?’’ என்று கேட்டார். திடீரெனக் கேட்கப்பட்ட இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் பேராசிரியர் தடுமாறிவிட்டார். “நான் தத்துவம், அரசியல், வரலாறு போன்ற பாடங்களைக் கரைத்துக் குடித்தவன். எனக்கு அறிவு குறித்த இந்தக் கேள்விக்குப் பதில் தெரியவில்லை” என்றார்.

‘‘எப்பவும் உங்க அறிவைப் பற்றியும் எங்கள் முட்டாள்தனத்தைப் பற்றியும் பேசுறீங்களே? அந்த அறிவு எப்படி வருதுங்கற சாதாரண கேள்விக்குப் பதில் தெரியாதா சார்?” என அந்த மாணவி மீண்டும் கேட்க, வகுப்பறை சிரித்தது. பேராசிரியர் அமைதியாக வெளியில் போனார்.

மறுநாள் அவர் வந்தார். ‘‘உன் கேள்வி பற்றி நேற்று முழுக்கப் படித்தேன், சிந்தித்தேன். இப்போது பதில் சொல்கிறேன். ஒருவர் தனக்குள் சிந்தித்து சுயபரிசோதனை செய்துகொள்வதன் மூலம் அறிவைப் பெறுகிறார். அறிவைப் பெற இது மட்டுமே ஒரே வழி” என்றார். மாணவி மீண்டும் எழுந்து, “நாம் சுயமாக சிந்தித்து மட்டுமே அறிவைப் பெற முடியும்னா, நாங்கள் ஏன் படிக்க வர வேண்டும்? நீங்கள் நடத்தும் பாடத்தைக் கேட்க வேண்டும்?” என்றார்.

இதற்கும் பதில் சொல்லத் தெரியாமல் பேராசிரியர் விழித்தபடி நிற்க, வகுப்பறை சிரித்தது. “பரவாயில்லை சார், நீங்க வீட்டுக்குப் போய் யோசிச்சிட்டு நாளைக்கு வந்து பதில் சொல்லுங்க” என்று சொல்லிவிட்டு மாணவி அமர்ந்தார்.

மறுநாள் ஒரு புதிய மனிதராக வகுப்பறைக்குள் நுழைந்தார் பேராசிரியர். ‘‘இவ்வளவு நாட்களாக உங்களிடம் மோசமாக நடந்துகொண்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்” என்று மாணவர்களிடம் வருந்திய பேராசிரியர், அந்த மாணவியை எழுப்பினார். “நீ எனக்கு முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறாய். இப்போது எனக்குப் புரிகிறது. சுயமாகச் சிந்தித்தும் அறிவைப் பெற முடியும், மற்றவர்களிடமிருந்தும் பெற முடியும். அதற்காகத்தான் கல்வி பெறுகிறோம்” என்றார்.

“நீங்கள் சொல்வது சரி. அறிவைப் பெற மூன்றாவதா இன்னொரு வழியும் இருக்கு’’ என்றார் மாணவி. ‘‘என்ன அது? நான் உன்னிடம் கற்றுக்கொள்ளத்





தயாராக இருக்கிறேன். சொல்" என்றார். "அனுபவங்கள் மூலமா பெறலாம் சார். இவ்வளவு நாளா உங்ககிட்ட அவமானப்பட்டோம் இல்லையா? அந்த அனுபவம் எங்களுக்கு அறிவைக் கொடுத்திருக்கு. இந்த வகுப்புல தடுமாறி நின்னீங்க இல்லையா? அந்த அனுபவம் உங்களுக்கு அறிவைக் கொடுத்திருக்கு" என்றார் மாணவி.

'மனிதர்கள் மூன்றுவிதமாக அறிவைப் பெறுகிறார்கள்' என்கிறார் கன்பூஷியஸ். தகவல்களை மனசுக்குள் அலசிப் பார்த்துப் பிரதிபலிப்பது முதல் வழி. அது நேர்மையானது. மற்றவர்களைப் பார்த்து அப்படியே செய்வது இரண்டாவது வழி. அது சுலபமானது. அனுபவங்களால் பெறுவது மூன்றாவது வழி. அது கசப்பானது. வேறு வழிகளும் உண்டு என்றாலும், இவையே ஆரம்பம்.

நன்னெறியை மாணவர்களிடமிருந்தும் ஆசிரியர்கள் கற்றுக்கொள்ளலாம் என்பதற்கு இந்தச் சம்பவம் உதாரணம். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்றுக்கொடுப்பார்கள் என்பதற்கு இன்னொரு சம்பவம் உதாரணம். இது நிஜமாகவே ஒருவர் வாழ்க்கையில் நடந்த சம்பவம்.

பள்ளியில் தேர்வு நேரம். ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் அமர்ந்து மாதாந்திரத் தேர்வு எழுதிக் கொண்டிருந்தார்கள். ஒரு வகுப்பில் தேர்வு எழுதிய ஒரு மாணவன், மேஜைக்கு அடியில் புத்தகத்தை மறைத்துவைத்துக் காப்பி அடித்து எழுதிக்கொண்டிருந்தான். வகுப்பாசிரியர் அதைக் கவனிக்கவில்லை.

ஒவ்வொரு வகுப்புக்கும் அமைதியாக வந்து தேர்வைக் கண்காணித்த தலைமை ஆசிரியர், அந்த மாணவனைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டார். உடனடியாக அவனுக்குத் தண்டனையும் அறிவித்தார். வகுப்பில் அத்தனை மாணவர்கள் முன்பாகவும், பெரிய பிரம்பு ஒன்றால் ஆறு முறை அடிப்பதுதான் அந்தப் பள்ளியில் தரப்படும் தண்டனை.

கையில் பிரம்பை எடுத்துக்கொண்டு அந்த மாணவனை நெருங்கினார் தலைமை ஆசிரியர். ஆனால், அவனுக்கு தண்டனை தருவதை வகுப்பாசிரியர் எதிர்த்தார். "அவன் காப்பி அடித்ததற்குக் காரணம் நான்தான். நான் அவனுக்கு ஒழுங்காகக் கற்றுக்கொடுத்திருந்தால், அவன் நன்றாகப் படித்து தேர்வு எழுதியிருப்பான். அவனுக்குச் சரியாகச் சொல்லித் தராததும், அவன் படித்துவிட்டானா என்பதை உறுதி செய்யாததும் என் தவறு. எனவே, தண்டனையை எனக்கே கொடுங்கள்" என்றார் வகுப்பாசிரியர்.

வகுப்பறையில் இருந்த அத்தனை மாணவர்களும் திகைத்துவிட்டனர். தலைமை ஆசிரியர் இதை எதிர்பார்க்கவில்லை. என்றாலும் அவர் தண்டனை தருவதைக் கைவிட முடியாது. அது பள்ளியின் ஒழுக்கத்தையே தகர்த்துவிடும். நேர்மையான ஓர் ஆசிரியரை அடிப்பதா என்று கலங்கினாலும், நீதியை வழங்கிடும் முடிவுடன் வகுப்பாசிரியர் பக்கம் திரும்பினார்.

"அந்த மாணவன் செய்த தவறுக்காக வகுப்பாசிரியர் தண்டிக்கப்படுகிறார்" என்றார். உடனே வகுப்பாசிரியர் அதை மறுத்தார். "இல்லை... அவன் செய்த தவறுக்காக அல்ல. நான் செய்த தவறுக்காக என்னைத் தண்டியுங்கள். என் பணியை நான் சரியாகச் செய்திருந்தால் இவன் காப்பியடித்திருக்க மாட்டான். எனவே, தவறு செய்தது நான்தான்" என்று கூறிவிட்டு, அடி வாங்குவதற்காக தனது கையை நீட்டியவாறு அந்த ஆசிரியர் நின்றார்.

தலைமை ஆசிரியர் பிரம்பை ஓங்க, காப்பி அடித்த மாணவன் ஓடிவந்து அவர் கால்களைக் கட்டிக்கொண்டான். "தயவுசெய்து எங்கள் ஆசிரியரை அடிக்காதீர்கள். நான் செய்ததுதான் தவறு. என் தவறுக்காக அவர் தண்டனை பெறுவதை என்னால் பார்க்க முடியாது. என்னைத் தண்டியுங்கள்" என்று கதறினான். தன் வகுப்பாசிரியரைக் கையெடுத்துக் கும்பிட்டு, "நான் இனி ஒழுங்காகப் படிப்பேன். தேர்வில் தோல்வி அடைந்தாலும், அதைக் கண்ணியத்துடன் ஏற்பேன். ஒருபோதும் காப்பி அடிக்க மாட்டேன்" என்றான். தலைமை ஆசிரியர் தன் கையில் இருந்த பிரம்பை முறித்துப் போட்டார்.

'எது தவறு' என்பதற்கான புதிய விளக்கத்தை அன்று அந்தப் பள்ளி பெற்றது. தண்டனை எதையும் தராமலே, மாணவர்கள் புதிய பாடத்தைக் கற்றார்கள்.

## உங்களிடம் உயர்மதிப்புகள் உண்டா?

இந்த விஷயங்கள் உங்களிடம் இருந்தால், நீங்கள் நன்னெறியும் உயர்மதிப்புகளும் கொண்டிருப்பதாக அர்த்தம்.

- உங்கள் கருத்துக்கு எதிராக வாதிடும் மனிதர்களிடம்கூடக் குரலை உயர்த்திப் பேசாதீர்கள். எதிர்கருத்து சொன்னாலும் மரியாதைக் குறைவாக நடத்தாதீர்கள்.
- எங்கேயும் சொன்ன நேரத்துக்குப் போங்கள். உங்களுக்குக் கொடுத்ததைவிட அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளாதீர்கள். மதிக்கப்படுவீர்கள்.
- தோற்றத்தை வைத்தும், பேச்சை வைத்தும் எவரையும் மதிப்பிடாதீர்கள். அடுத்தவர்களின் தரத்தை மதிப்பிடுவது நம் வேலை இல்லை.
- அடுத்தவர்களை ஊக்கப்படுத்தினால், நம் செயல்களுக்கும் எங்கெங்கோ இருந்து ஊக்கம் கிடைக்கும். பிறரைப் பாராட்டினால், நமக்கும் பாராட்டுக் கிடைக்கும்.
- முதுகுக்குப் பின்னால் யாரையும் குறை சொல்லாதீர்கள். நேசிக்கும் மனிதர்களை எந்தச் சூழலிலும் விட்டுக் கொடுக்காதீர்கள்.
- நீங்கள் பார்க்கும் எல்லா விஷயங்கள் குறித்தும் கருத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. சில சூழல்களில் வாய்மூடி இருப்பதே புத்திசாலித்தனம்.
- 'இது உன்னால் முடியாது' என்று யாராவது சொன்னால் நம்பாதீர்கள். அவர்களின் திறமையை வைத்தே அந்தச் செயலை அவர்கள் மதிப்பிடுகிறார்கள். உங்கள் திறனை நீங்கள் அறிவீர்கள்.





## நம்பிக்கை தரும் நன்னெறி!

- நீங்கள் நேசிப்பவர்களுக்கு உதவிசெய்ய எந்த எல்லை வரையும் செல்லுங்கள்.
- யாருக்காவது வாக்குறுதி கொடுத்தால், அதை நிச்சயம் காப்பாற்றுங்கள்.
- விடாமுயற்சி வெற்றியைத் தரும். நீங்கள் சரி என்று நம்புவதைத் துணிந்து செய்யுங்கள்.
- பெருந்தன்மை காட்டுங்கள், உங்களை நிறைய நன்மைகள் தேடிவரும்.
- வாழ்வில் அசாதாரணமான சாதனைகள் சாத்தியம்தான் என்பதை எப்போதும் நம்புங்கள்.
- எந்தச் சூழலிலும் நம்பிக்கையை இழக்காதீர்கள். உலகமே நம்பிக்கை என்ற அச்சாணியில்தான் இயங்குகிறது.
- எல்லாக் கனவுகளும் நிஜமாகும். அதற்காக உழைப்பதுதான் உங்கள் வேலை.
- எப்போதும் பொறுமையைக் கைவிடாதீர்கள். நல்ல விளைவுகளுக்காகக் காத்திருக்கத்தான் வேண்டும்.

## அது என்னால் முடியாது!

ஒரு கிராமத்துக்குத் தச்சு வேலை செய்ய வந்த தச்சர் ஒருவர், தான் சுத்தியலை மறந்துவிட்டு வந்ததைத் தாமதமாகவே உணர்ந்தார். அந்தக் கிராமத்தில் இருக்கும் இரும்புக்கொல்லரிடம் சென்று உதவி கேட்டார். அவர் தன்னிடம் இருந்த சுத்தியலை இரவலாகக் கொடுத்தார். பார்க்கவே அது நன்றாக இருந்தது. அதைப் பயன்படுத்திய சில நிமிடங்களிலேயே வித்தியாசத்தை உணர்ந்தார் தச்சர். புகழ்பெற்ற நிறுவனங்களின் தயாரிப்பைவிட அது தரமாக இருந்தது. சுலபமாகவும் வேலைகளை முடிக்க முடிந்தது.

அதைத் திரும்பக் கொடுக்கப் போனபோது, "இந்தச் சுத்தியல் ஏது?" என்று கேட்டார். "நானே என்

## உழைப்பை நம்புகிறேன்!

தன் நாட்டு மக்கள் உழைப்பை நம்புகிறார்களா, அல்லது குறுக்கு வழியில் அதிர்ஷ்டத்தைத் தேடி முன்னேற விரும்புகிறார்களா என்று அறிந்துகொள்ள ஒரு மன்னர் விரும்பினார். அதற்காக ஒரு கிராமத்தைத் தேர்வு செய்தார். ‘இந்த கிராமத்தில் இருக்கும் எல்லோருக்கும் அரண்மனையில் மன்னர் விருந்து தருகிறார்’ என்று அரசாங்க அறிவிப்பு வெளியானது.



விருந்துக்குப் போனால் மன்னர் விலையுயர்ந்த பரிசுகள் கொடுப்பார் என்ற நப்பாசையில் மக்கள் கூட்டம் கூட்டமாகக் கிளம்பிச் சென்றார்கள். எல்லோரும் அரண்மனைக்குப் போன நேரத்தில், மன்னர் மாறுவேடத்தில் அந்த கிராமத்துக்கு வந்தார். ஊரே காலியாக இருக்க, ஒரே ஒரு பெண் மட்டும் தனியாக வயலில் வேலை செய்துகொண்டிருந்தார்.

அதைப் பார்த்து ஆச்சர்யப்பட்ட மன்னர் அந்தப் பெண்ணிடம் விசாரித்தார். “உங்களுக்கு விஷயமே தெரியாதா? மன்னர் அரண்மனையில் விருந்து தருகிறார். அதை சாப்பிடவும், தங்களுக்கு ஏதாவது அதிர்ஷ்டவசமாகப் பரிசு கிடைக்காதா என்ற ஆசையாலும் எல்லோரும் போயிருக்கிறார்கள்” என்றார். “நீ போகவில்லையா?” என்று மன்னர் கேட்க, “எனக்கு அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை இல்லை. உழைத்தால் மட்டுமே கூலி கிடைக்கும். இன்று வரும் கூலியை வைத்தே என் குடும்பத்துக்கு சாப்பாடு போட முடியும். அதை இழந்தால் அவர்களைக் காப்பாற்ற முடியாது. அதனால்தான் நான் போகவில்லை” என்றார் அவர்.

இதைக் கேட்ட மன்னர் நெகிழ்ந்தார். “பெண்ணே, எல்லோரும் அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து மன்னரின் விருந்துக்குப் போனதாகச் சொன்னாய். அந்த மன்னரே உன்னைத் தேடிவந்து பரிசு தந்தார் என்று எல்லோருக்கும் சொல்” என்று அந்தப் பெண் கையில் பொற்காசு மூட்டையைத் தந்துவிட்டுச் சென்றார் மன்னர்.

உழைப்பே உண்மையான அதிர்ஷ்டம்.

உலைக்களத்தில் உருவாக்கியது” என்றார் கொல்லர். இந்த உள்ளடங்கிய கிராமத்தில் இப்படி ஒரு திறமைசாலியா என வியந்தார் தச்சர். கொல்லரின் திறமையைப் பாராட்டிவிட்டு, அவரிடம் தன் பயன்பாட்டுக்காக நான்கைந்து சுத்தியல்கள் செய்து தரச் சொல்லி விலைக்கு வாங்கினார்.

அவர் நகரத்துக்கு எடுத்துப் போன அந்தச் சுத்தியல்களைப் பார்த்து வியந்து நிறைய பேர் கிராமத்துக் கொல்லரைத் தேடி வந்தனர். ஒரு கான்ட்ராக்டர் வந்து மொத்தமாக 20 சுத்தியல்கள் கேட்டார். “அந்தத் தச்சருக்குச் செய்ததைவிட நல்லாச் செய்து கொடுங்க” என்றார். “அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. நான் எதைச் செய்தாலும் குறையில்லாமச் செய்வேன். யாருக்காகச் செய்தாலும் தரம் ஒரே மாதிரித்தான் இருக்கும்” என்றார் கொல்லர்.

சீக்கிரமே அவரின் திறமை புகழ்பெற ஆரம்பித்தது. ஒரு தொழில் நிறுவனத்திலிருந்து அவரைத் தேடி வந்தார்கள். “மற்றவர்கள் தந்ததைவிட ஒன்றரை மடங்கு அதிக விலை தருகிறோம். நீங்கள் செய்யும் எல்லாச் சுத்தியலையும் எங்களுக்கே விற்க வேண்டும். வேறு யாருக்கும் தரக்கூடாது. ஒரு வருடப் பணத்தை முன்தொகையாகக் கொடுத்துவிடுகிறோம்” என்றார்கள்.

கொல்லர் மறுத்தார். “எனக்கு இந்த வருமானம் போதும். நான் பேராசைப்பட்டால், சுத்தியலின் விலை ஏறும். நீங்கள் சம்பாதிப்பீர்கள். ஆனால், எளிய மக்களுக்கு அதனால் நஷ்டம் ஏற்படும். என் திறமை அவர்களுக்கே பயன்படட்டும்” என்றார் அவர்.

திறமையும் நேர்மையும் இருப்பவர்கள், எல்லோரின் நன்மை பற்றியும் யோசிப்பார்கள்.

# நன்னெறிகளை உருவாக்குங்கள்!




ஒற்றை விதையிலிருந்து ஒரு பிரமாண்ட மரம் வளர்வது போல, குறிப்பிட்ட சில பண்புகளிலிருந்தே அத்தனை நன்னெறிகளும் உருவாகின்றன. தத்துவ அறிஞர்கள் பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்கள் இதைத்தான் சொன்னார்கள். நீதி, உண்மை, அன்பு, அழகு, நன்மை ஆகிய ஐந்து அடிப்படையான மதிப்புகளிலிருந்தே எல்லா நன்னெறிகளும் உருவெடுக்கின்றன.

**ஒருவர் தனக்கான நன்னெறிகளை உருவாக்கிக்கொள்வது எப்படி?**

- வாழ்க்கையில் உங்களுக்கு எது முக்கியம்? நீங்கள் எதையெல்லாம் நம்புகிறீர்கள்? உங்கள் நீண்ட கால இலக்குகள் என்னென்ன? உங்களை இந்த உலகம் எப்படி மதிப்பிட வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்? இப்படி உங்கள் நம்பிக்கைகளும் இலக்குகளுமே உங்கள் செயல்களைத் தீர்மானிக்கும்.
- உங்கள் வாழ்க்கையிலும், செய்யும் வேலை அல்லது தொழிலிலும் எந்தெந்த விஷயங்களை மதிப்பாக நினைக்கிறீர்கள்? அந்த மதிப்பான பண்புகளே உங்கள் செயல்களிலும் முடிவுகளிலும் பிரதிபலிக்கும். எது சரி, எது தவறு என்று பிரித்துப் பார்க்கும் பக்குவத்தைக் கொடுக்கும். நேர்மை, கண்ணியம், மரியாதை, பொறுப்புணர்வு, கருணை போன்றவை உங்கள் மதிப்பைத் தீர்மானிக்கும்.
- உங்கள் முன்மாதிரிகளைக் கண்டறியுங்கள். நீங்கள் பார்த்து வியக்கும், மரியாதை கொடுக்கும் மனிதர்களின் வாழ்வைப் பாருங்கள். அவர்கள் எதையெல்லாம் மதிக்கிறார்கள்? எப்படிப்பட்ட கொள்கைகளுடன் வாழ்கிறார்கள்? அந்த மதிப்பீடுகளும் கொள்கைகளும் அவர்களின் வாழ்வில் என்ன மாற்றங்களை ஏற்படுத்தியது? இதையெல்லாம் பார்த்துக் கற்றுக்கொள்ளுங்கள்.
- உங்களுக்கெனச் சில கொள்கைகளை உருவாக்கிக்கொள்ளுங்கள். அந்த கொள்கைகள்படி வாழப் பழகுங்கள். உங்கள் செயல்களில் அவற்றைப் பிரதிபலியுங்கள். உங்கள் வளர்ச்சி அவற்றின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும்.
- மற்றவர்களிடம் உண்மையாக இருப்பதற்கு முன்பாக, நமக்கு நாமே உண்மையாக இருக்க வேண்டும். நமக்கு நாமே சொல்லிக்கொள்ளும் எதுவும் போலியாக இருக்கக்கூடாது.
- நம் சிந்தனைக்கும் செயல்பாடுகளுக்கும் வித்தியாசம் இருக்கக்கூடாது. நம் சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இருக்கக்கூடாது. எல்லாவற்றிலும் நம் நேர்மை வெளிப்பட வேண்டும்.
- சொற்களாலும் செயல்களாலும் யாரையும் காயப்படுத்தக்கூடாது. எவராக இருந்தாலும், அவருக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும்.
- ‘இவருடன் பேசினால் வம்பை விலைகொடுத்து வாங்குவது போல’ என்று எவரும் நினைக்காதபடி நம் பேச்சு இருக்க வேண்டும். கண்ணியமற்ற வார்த்தைகளை உரையாடலில் பயன்படுத்தக்கூடாது. அப்போதுதான் நம் சொல்லுக்கு மதிப்பு இருக்கும்.
- வாழ்வின் ஒவ்வொரு படியிலும் நன்னெறி வெளிப்பட வேண்டும். அறிவின் வெளிச்சம் உங்களை வழிநடத்த வேண்டும். அதன்பின் வாழ்வில் நீங்கள் அடைவது உயர்வும் வெற்றிகளும் மட்டும்தான்!



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL




SUKRA® Super Fine Banians | ROMEX® Supreme Banians | RISE-UP® Premium Banians | ARCHERY® Gym Vest | COMPACT® Flexible Rib Vest | ACOSTE® BANIANS | BRIEF | TRUNKS

Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-02-2024. Posted at Tirupur BPC on 5th of every month.

